# தமிழ் முரசு

முரசு:4 ஒலி:6
சித்திரை 1986

அனைத்து இயக்கங்களும்
இணைந்து போராடுவோம்



அடுப்போடு வாழ்ந்த நெருப்புக்கள் நாங்கள்
எரிப்பதற்காக எழுந்து வருகிறோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிசின் பார்வையில்

தமிழ் நேசன் - 54

## ஈழப் போராட்டம் நேரானது... கோணலானது....

நேரானதும், கோணலானதுமான ஈழப் போராட்டத்தை குறுகிய நோக்கோடும், இராணுவப் பார்வையோடும் மட்டும் நோக்கிய சில இயக்கங்களின் தன்மைகள் இன்று ஈழப் போராட்டத்தில் ஒரு பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளன. சரியான சித்தாந்தங்களைச் சுவீகரிக்காததாலும், கட்சி ஜனநாயகம் அமுல் நடத்தப்படாததாலும் உட்கட்சி முரண்பாடுகள் இத்தகைய இயக்கங்களிடையே அதிகரித்துக் கொண்டு செல்லும் இவ்வேளையில், இவ் இயக்கங்களின் இயங்கும் உரிமையை நிராகரித்து, ஈழப் போராட்டத்தில் இராணுவரீதியான ஒரு தீர்வை நாம் மாத்திரம் காண்போம் என்று ஏகபோகம் பேசும் சிலரால் இயக்கங்களுக்கிடையிலான முரண்பாடுகளும் அதிகரித்துக் கொண்டு போகின்றன.

இவற்றின் விளைவுகள்தான் போராளிகள் மீது திருப்பப்பட்ட துப்பாக்கிகள் இன்று பொதுமக்கள் மீது திருப்பப்பட்டிருப்பதும், சரியான இலக்கின்றி அதுவும் இயக்கங்களை எதிரியாக கண்டுபிடித்து அழித் தாக்குதல் நடத்திவருவதும். இவற்றிற்கான காரணம் இயக்கங்களின் தலைமையின்மையா அல்லது இயக்கங்களுக்குள் ஊடுருவியிருக்கும் தீயசக்திகளின் சதிகளா? எதுவாக இருந்தாலும் ஈழப் போராட்டத்தில் இது அபாயகரமான கட்டம். ஒரு குறிப்பிட்ட இயக்கத்தின் வெளிநாட்டுக்கிளையினரால் சக இயக்கங்கள் பொது எதிரியான சிறீலங்கா அரசுக்கு எதிராக நடத்தும் தாக்குதல்கள் கொச்சைப்படுத்தப்படுகின்றன. சில சம்பவங்களில் சிறீலங்கா அரசே தாக்குதல் நடத்தியது என உறுதிப்படுத்தியும் கூட இவர்கள் அப்படி ஏதுமே நடக்கவில்லை என பொய்யுரைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல், சமீபத்தில் ஒரு இயக்கத்தில் ஏற்பட்ட உட்கட்சி மோதலை பெரிதுபடுத்தி பூதாகரமாக்கி அந்த இயக்கம் சுக்கல் சின்னமாக உடைந்துவிட்டது என்றவகையில் பொய்களை மக்களிடையே பரப்பிவிட்ட தன்மை, இயக்கங்களின் போராட்ட ரகசியங்களை- குறிப்பாக இயக்கங்கள் பாவிக்கும் ஆயுதங்கள், இயக்கப்பட்டுள்ள எதிரிப்படையினரால் கைப்பற்றப்படும்போது அவைபற்றிய விபரங்கள் - போன்ற செய்திகளை பகிரங்கப்படுத்தி சிறீலங்கா அரசுக்கு துணைபோகும் செயல், ஒரு இயக்கங்களுக்கு ஆதரவு வழங்குபவர்களை அந்த இயக்கங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டாம் என்று கூறி சக இயக்கங்களை கொச்சைப்படுத்தி இவர்கள் வெளியிடும் பொய்யுரைகள் இவை எல்லாமே இவை ஈழவிடுதலை இயக்கமாக இல்லாமல் சிறீலங்காவின் கைக்கூலிப் பிரிவாகிய ஒன்றுபோல் செயற்படுவதாகவே எண்ணும்படியாகத் தோன்றுகிறது.

ஈழப்போராட்டத்திற்கு தன்னையே அர்ப்பணித்து போராடுகின்ற போராளிகள் இந்த சுயநலமிகளின் சதிகளை, தம்மிடையே பேதங்களை ஏற்படுத்துவோரை ஒரு கேவலங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் ஈழப்போராட்டம் நீளமானது... கடுமையானது. எங்கள் பொது எதிரி ஒருவன்தான். அதற்கெதிராக போராட்டத்தை முன்னெடுக்கும் உரிமை அனைத்து இயக்கங்களுக்கும் உண்டு. ஒவ்வொரு இயக்கங்களும் தத்தமது கருத்துக்களுடன் மக்களிடம் செல்லும்போது மக்கள் தெரிவில் சரியானதை தேர்ந்தெடுத்து அவ்வியக்கத்தின் கீழ் அணிதிரள்வார்கள். அதைவிட்டு விட்டு இலட்சியத்தை மறந்து, சக இயக்கங்களைக் கொச்சைப்படுத்தி, மற்ற இயக்கங்களிடையே உட்கட்சி மோதல்களை வளர்த்து இவற்றின் மேல் ஈழப்போராட்டத்தின் தலைமைத்துவத்தைப் பெற நினைப்பவர்கள் உண்மையில் எதிரியின் கரங்களைத்தான் பலப்படுத்துகிறார்கள். எனவே இலட்சியம் எனும் அத்தளத்தில் நின்று எமது கருத்துக்களுடன் மக்களிடம் சென்று அவர்களை வெல்வோம் - பொதுஎதிரியை தோற்கடிப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லாம் தெரிந்தவர்கள்

தோழா,
இன்னமும் உயிர்போகவில்லை
இறுதி மூச்சில் ஒரு வார்த்தை
உன் படத்தைக் காட்டி,
தெரியுமா? என்று கேட்கிறார்கள்
இந்த மடையர்கள்
கேட்டுக் கேட்டுக்
களைத்து விட்டனர்
என்மனம் இன்னமும்
களைக்கவில்லை.

என்ன புன்னகை உன் படத்தில்!
இதனை யார் இவர்களுக்குக் கொடுத்தது?
யார் காட்டிக் கொடுத்தது?
புலப்படவில்லை.

'எல்லாமே எங்களுக்குத் தெரியும்'
என்று விட்டு,
என்னை,
'சொல்! சொல்!!' என்கிறார்கள்.

யார் சொன்னது?
யார் காட்டிக் கொடுத்தது?
புலப்பட வில்லை.
ஆனால் ஒன்று
இன்று நான்; நாளை நீ!
இந்தக் கழுகுகள் நாளை
உன்னையும் சிதைக்கலாம்.

நான் ஒன்றும் சொல்லவில்லை —
நீயும் ஒன்றும் சொல்லாதே
ஏனெனில்
'அவர்களுக்குத்தானே எல்லாம் தெரியுமாம்!'

தேப்பிரியன்

நன்றி: மரணத்துள் வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ தமிழக சிறீலங்கா செய்திகள்

## இலங்கையில்

'கடந்த பத்து மாதங்களுக்குள் 2587 தமிழர் படுகொலை' - லண்டன் காடியன்

'கடந்த 3 வருடங்களில் 7000 தமிழர் படுகொலை' - லெ மொண்ட்.

கடந்த பெப்ரவரி மாதம் முதல்வாரத்துடன் முடிவடைந்த பத்து மாத காலத்தில் 2587 தமிழ் மக்களைக் கொன்றுள்ளதாக 'காடியன்' பத்திரிகை தகவல் தெரிவித்துள்ளது. இக்காலப்பகுதியில் 12015 பேர் சிறிலங்கா பாதுகாப்புப் படைகளால் கைது செய்யப் பட்டுள்ளனர் என்றும் 547 பேர் பற்றிய தகவல்கள் எதுவும் இல்லையென்றும், கைது செய்யப்படும் இளம் பெண்கள் பாலியல் வதைகளுக்கு உட்படுத்தப்படுவதாகவும் 'காடியன்' மேலும் தெரிவித்துள்ளது. அதே சமயம் பிரபல பிரெஞ்சுப் பத்திரிகையான 'லெ மொண்ட்' தமிழ் மக்கள் மீது சிறிலங்கா அரச பயங்கரவாதத் தாக்குதல்களை விஸ்தரித்ததுடன் கடந்த 3 வருடங்களில் 7000க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்று செய்தி வெளியிட்டுள்ளது. உலக அரங்கில் சிறிலங்கா அரசின் வேஷத்தை கலைய ஆரம்பித்திருப்பதன் வெளிப்பாடுகளே இவை. தமிழ் பேசும் மக்களுக்கெதிரான சிறிலங்கா அரசின் இன அழிப்பு நடவடிக்கைகளை ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் கனடா, பிரித்தானிய, அவுஸ்திரேலிய, மற்றும் தென் அமெரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர். சிறிலங்கா அரசின் மனித உரிமை மீறல்களை ஐ.நா. மனித உரிமைகள் பிரிவின் 'அடிமை எதிர்ப்பு அமைப்பு' வன்மையாய்க் கண்டித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெயவர்த்தனவும் அவரது சகபாடிகளும் மறந்து சொன்ன உண்மைகள்.

பொய்யிலேயே ஊறித் திளைத்த ஜெயவர்த்தனவும் அவரது சகபாடிகளும் சிலவேளைகளில் தம்மை மறந்து சில உண்மைகளைக் கூறிவிடுவதுண்டு. அவற்றில் சில..

ஜெயவர்த்தன: 'இன்று ஓர் அரசியல் தீர்வுக்கு இடமிருந்தாலும் அதை இன்று நடைமுறைப்படுத்தக்கூடிய நிலையில் நான் இல்லை. (லண்டன் ரைம்சுக்கு அளித்த பேட்டியில்)

தொண்டமான்: 'நான் இல்லையென்றால் இலங்கையில் எப்போதோ மார்க்சிச ஆட்சி வந்திருக்கும். இந்த உண்மை எனக்கும், ஜே.ஆருக்கும் புரியும்'. (சிறீலங்கா பாராளுமன்றத்தில்)

ரணில் விக்கிரமசிங்கா: 'வடக்கில் கடமையில் ஈடுபட இராணுவ வீரர்கள் விரும்பவில்லை. நாம் பலாத்காரமாகவே அவர்களை இங்கு அனுப்புகிறோம்.' (கிளிநொச்சியில்)

## இராணுவ பலத்தை அதிகரிக்கும் முயற்சியில் சிறீலங்கா தீவிரம்! ஆனால்.....

ஈழ மக்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாக அழிக்க முனையும் தனது முயற்சிக்காக சிறீலங்கா அரசு தனது இராணுவ பலத்தை அதிகரிக்கும் செயல்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இவ்வகையில் சிறீலங்கா இராணுவத்துக்குத் துணையாக ஒரு இலட்சம் பேரைக் கொண்ட நிரந்தர இராணுவப் படையொன்றை அமைக்க சிறீலங்கா அரசு தீர்மானித்துள்ளது. இவ்விராணுவத்துக்கு பாகிஸ்தானில் பயிற்சி பெற்றவர்களே தலைமை தாங்குவார்களாம். அதேவேளையில் சிறீலங்கா அரசு ஈழப் போராளிகளின் முகாம்களைத் தாக்குவதற்காக 20 கோடி டொலர்கள் செலவில் நவீன ஆயுதங்களை இறக்குமதி செய்துள்ளதாக 'ராய்ட்டர்' செய்தி ஸ்தாபனம் தகவல் வெளியிட்டுள்ளது. அதிவேக காவல் படகுகள், இத்தாலிய உற்பத்தியான 'மார்செட்டி' போர் விமானங்கள், 'பெல்' ஹெலிகொப்டர்கள் ஆகியனவும் இவற்றுள் அடங்கும். அதேசமயம் ஜெயவர்த்தனவின் இராணுவத்துக்கு தமிழ் கொரில்லாக்களை (ஈழப் போராளிகளை) தோற்கடிக்கும் பயிற்சியோ, ஆயுத பலமோ, துணிவோ இருப்பதாக தாம் நம்பவில்லை என பல ராஜதந்திரிகள் தெரிவித்ததாக 'ராய்ட்டர்' தெரிவித்துள்ளது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்கிரமிப்பாளரின் தடைக்கு எதிராக ஈழக் கடற்றொழிலாளர்கள் எழுச்சி ஊர்வலம்!

ஈழக் கடற்பிரதேசங்களில் ஈழ மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு தடைவிதிக்கும் சிறிலங்கா அரசின் கடல் வலயப் பிரகடனத்தால் பாதிக்கப் பட்டுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பத்தா யிரத்துக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் 19.3.86 அன்று ஆக்கிரமிப்பு அரசுக்கெதிராக ஒரு பெரும் எதிர்ப்பு ஊர்வலத்தை நடத்தியுள்ளனர். இதன் எதிரொலியாக நாவாந்துறை முதல் கொழும்புத்துறை வரையிலான கடற்கரைப் பகுதியிலுள்ள சந்தைகள், கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. இவ்வூர்வலத்தில் வயோதிபர்கள், இளம் பெண்கள், வாலிபர்கள், சிறுவர், சிறுமியர், பாடசாலை மாணவர்களைப் பிரதிநிதப்பட்டவர்களும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

## 'சிறிலங்காவின் பொருளாதாரம் சீர்குலைகிறது' - ரொனி டி மெல் புலம்பல்.

'வங்குரோத்து நிலைமையை அடைந்துள்ள சிறிலங்காவின் பொருளாதாரத்தைக் காப்பாற்றுவதற்கு மேலதிக கடன் பெற வேண்டியிருக்கிறது', இவ்வருடம் யூன் மாதம் நடைபெறவுள்ள "இலங்கைக்கு உதவியளிக்கும் நாடுகளின் குழு" கூட்டத்தின்போது சிறிலங்கா அரசு கோரியுள்ள ஒரு வெளிநாட்டுதவியையும் பெறுவதற்காகவே அரசு புதிய, யுத்த நிறுத்த அறிக்கையை வெளியிட்டுள்ளது என்ற உண்மைகளை சிறிலங்கா நிதியமைச்சர், பி.பி.சி. நிருபரிடம் தெரிவித்துக் கொண்டுள்ளார். சிறிலங்காவின் பொருளாதாரத்தைக் காப்பாற்றுவதும், வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதும் கடினமான செயல்கள் என்று புலம்பியுள்ள அவர் புனர்ல் அயர்சில் நடைபெற்ற நிதியமைச்சர்கள் மாநாட்டில் (படுகொலைகள் தொடர்கையில்) - இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுகையில் சிறிலங்காவுக்கு எப்படி நிதி வழங்குவது என்ற கேள்வியெழ ஒருகோ பித்த நேரில் எதிர்த்ததாகக் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'யுத்த நிறுத்த அறிக்கை, உலகைச் சமாளிக்கும் முயற்சியே!' - E.P.R.L.F பிரதிநிதி.

'உலகநாடுகளிலிருந்தும், பல்வேறு மனித உரிமைகள் ஸ்தாபனங்களிலிருந்தும் எழுந்துள்ள குற்றச் சாட்டுக்களைச் சமாளிக்கவே சிறிலங்கா அரசு ஒருதலைப்பட்சமாக இவ்வாறான விமானக் குண்டுவீச்சு அறிவித்தலை விடுத்துள்ளது' என ஈ.பி மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பில் தோழர் கேதீஸ்வரன் கருத்துத் தெரிவித்துள்ளார்: "சிறிலங்கா அரசின் இராணுவ முகாம்களில் ஒரு கலவர நிலை தோன்றுகிறது. ஆயுதப் படையினர் போரிட்டுக் களைத்துவிட்டனர். இந் நிலையில் எதுவும் செய்ய முடியாமலே இந்த அறிவிப்பு' எனக் கருத்துத் தெரிவித்த ஈழப்புரட்சி யமைப்பின் தோழர் பாலகுமார் 'சிறிலங்கா அரசின் குழச்சங்களைப் புரிந்த நாம் இவ்வழியில் சிக்கமாட்டோம்' எனவும் கூறியுள்ளார்

## கடற்படைகளின் நயினாதீவு வெறியாட்டத்துக்கு மக்கள் விடுதலைப் படை பதிலடி!

நயினாதீவில் பாகிஸ்தானில் பயிற்சிபெற்ற [illegible] கடற்படையினர் நிகழ்த்திய வெறியாட்டத்தில் பலர் கொல்லப்பட்டதுடன் பல வீடுகள், கடைகள் தீக்கிரையாக்கப்பட்டு நகைகள் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. 3500 ஐ அண்மித்த மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். மக்கள் தப்பியோட வழியில்லாமல் படகுகள் எரிக்கப்பட்டன. வரலாற்றுச் சிறப்புவாய்ந்த நாகபூஷணி அம்மன் கோவிலின் தேர், மஞ்சம், சப்பறம், சகடை, மடம் ஆகியன எரியூட்டப்பட்டு ஆலயத்துக்கு 20 இலட்சம் ரூபா பெறுமதியான இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடற்படையினரின் இக்கொலைவெறிச் செயலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் EPRLF இன் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படை காரைநகர்க் கண்மையில் நிகழ்த்திய கடற்கண்ணிவெடித் தாக்குதலில் சிறிலங்கா கடற்படையினர் பலர் கொல்லப்பட்டதுடன் [illegible] நாசமாக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்தியஸ்தத்துக்கான பிரதிநிதிகளை ஏற்றுக் கொள்ளவோ அனுப்பவோ இந்தியா தயாரில்லை.

இலங்கையில் அப்பாவித் தமிழர் மீது தொடுக்கப்படும் தாக்குதல்கள் நிறுத்தப்படும் வரை இவ்விவகாரம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்த தனது பிரதிநிதியொருவரை அனுப்பவோ அல்லது சிறிலங்கா அரசினால் அனுப்பப்படும் எந்தவொரு பிரதிநிதியையும் ஏற்றுக் கொள்ளவோ இந்திய அரசு தயாரில்லை என இந்திய அரச வட்டாரங்களை ஆதாரங்காட்டி 'இந்து' செய்தி வெளியிட்டுள்ளது. 'இலங்கையின் இனப் பிரச்சினையில் இந்தியா வெளிச்சக்தியாக இருக்கமுடியாது' என்றும் 'இந்து' ஆசிரியத்தலையங்கம் எழுதியுள்ளது.

## ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் மீது துப்பாக்கிப் பிரயோகம். மூவர் பலி! ரெலோவும் அறிக்கை!

யாழ். வைத்தியசாலையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது கொல்லப்பட்டவர்களுக்கு அநுதாபம் தெரிவிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட ஊர்வலம் இன்று நல்லூர் முத்திரைச் சந்தையை கடக்கும் போது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு இளம் பெண்களும், ஒரு இளைஞனும் கொல்லப்பட்டதுடன் 8 பேர் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களின் மரண ஊர்வலம் திரளான மக்களுடன் யாழ். நகரவீதிகளில் நடைபெற்றது. இச்சம்பவங்கள் பற்றி TELO விடுத்த அறிக்கையில் வர்க்க குரோதம் காரணமாக எல்லைமீறிய வகையில் தமது அராஜகத்தை வெளிப்படுத்திய தமது குழுப் பிரிவினர் சிலர் மீது தாம் நடவடிக்கை எடுத்ததாகவும் இதில் கொல்லப்பட்டவர்கள் சிலரது அநுதாபிகள் மேற்கொண்ட ஊர்வலத்தில் வந்தோர் சிலர் தமது முகாமொன்றில் காவலுக்கு நின்றவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தற்பாதுகாப்புக்காரணமாக தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராளிகளை துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும். இதனால் அநாவசியமாக உள்ளூர் யுத்தத்தில் பங்குபெற்றிய அப்பாவி மக்கள் சிலர் பலியாக வேண்டிய நிலை ஏற்பட்டது எனக் கூறியதுடன் 'தற்சமயம் எழுந்துள்ளவைகளுக்கு ஏற்பட்டுள்ள முரண்பாட்டைப் பயன்படுத்தி ஒரு சில தனிநபர்கள் ஒரு பகுதி தமிழ் மக்களின் எம்மீது வெறுப்பினை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதன் வெளிப்பாடே உள்ளூர் யுத்தமும், துப்பாக்கிப் பிரயோகமும் ஆகும் எனக் கூறப்பட்டுள்ளது.

---

## செய்திகள்....செய்திகள்....செய்திகள்...செய்தி–

- ஈழத்தின் நிலைமைகள் தொடர்ந்து மோசமாகிப் போக இருக்கும் இவ்வேளையில் சிறீலங்கா அரசின் பாசாங்குகளை நம்பி அகதிகள் இந்தியாவிலிருந்து நாடு திரும்புதல் என்ற பேச்சுக்கே இடமில்லை என ஈழத் தேசிய விடுதலை முன்னணிப் பிரதிநிதி கூறியுள்ளார்.
- இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு உடனடித் தீர்வு காணுமாறு தமிழக அரசு இந்தியப் பிரதமரைக் கோரியுள்ளது.
- சுவிற்சலாந்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள தமிழ் மக்களை திருப்பியனுப்ப வேண்டாம் என 51,000 சுவிஸ் பிரஜைகள் கையொப்பமிட்டு சுவிஸ் அரசைக் கோரியுள்ளனர்.
- முதுபெரும் தமிழறிஞராகிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் 13.3.86 அன்று காலமானார்.
- 'இலங்கை இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு என்று வாய்ப்பேச்சினால் கூறினால் மட்டும் போதாது. செயல்முறையில் தீர்வுகாண சிறீலங்கா அரசு முயல வேண்டும்' என இந்தியப் பிரதமர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராடுவதற்காக திட்டமிடுவோம் திட்டமிட்டுப் போராடுவோம்

ஈழப் போராட்டம் தனது வரலாற்றுக் காலத்தில் என்றுமே சந்தித்திருக்காத சிக்கலை இன்று தழுவி நிற்கின்றது.

ஈழதேசத்தின் ஒவ்வோர் அங்குல நிலத்தையும், ஒவ்வொரு துளி நீரையும் ஒவ்வொரு துளி காற்றையும் தனது காலடிக்குக்கீழ் அடிமையாகக் கொண்டுவரவேண்டும் என்ற துடிப்பில் ஆக்கிரமிப்புச் ஸ்ரீலங்கா எதிரி வேகமாக மிகவேகமாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறன். வேற்று நாடுகளில் பயிற்சி பெற்ற எதிரியின் கூலிப்படைகளும் கூலிக்குப் பணிபுரியும் வேற்றுநாட்டுப் படைகளும் இணைந்து நடத்தும் மனித வேட்டையில் தினமும் நூறுநூறாக அழியும் ஈழமக்கள், தினமும் ஆயிரமாயிரமாய் தாங்கள் பிறந்து வளர்ந்த பாரம்பரிய மண்ணை விட்டு அகதிகளாய்... அநாதைகளாய்... அடித்து விரட்டப்படும் ஈழ மக்கள், தினமும் அரச விமானங்களதும் போர்க்கப்பல்களதும், பீரங்கிகளதும் குண்டு வீச்சால் சிதைந்து போகும் ஈழ தேசம் என சோக வரலாறு ஒரு புறமாய் எங்கள் மக்களது இரத்தத்தால் எழுதப்படும் அதே சமயத்தில்........

இயக்கங்களுக்கிடையிலான முதலாளித்துவ சக்திகளின் ஊடுருவல், தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரனாகிவிட்ட சிலரின் போக்கு, ஆயுதங்கள் மூலம் மக்களை அடக்கியாள முற்பட்ட சில இயக்கங்களின் செயல்கள், எதிரி யார் என்பதை இனங்காண மறுத்து தொடர்ச்சியாக மூர்க்கத்தனமாக தோழமை இயக்கங்களை களங்கப்படுத்தும் காயப்படுத்தும் சில இயக்கங்களின் செயல்கள், ஆகியன மக்களின் மனதில் இருந்த எதிர்காலக்கனவுகளைச் சின்னாபின்னப்படுத்தி உள்ளது மாத்திரமன்றி இயக்கங்களுக்கும் மக்களுக்குமிடையில் உள்ள இடைவெளியைத் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் அவல நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சிக்கல்களும் போராட்டத்தின் இன்றைய குழப்பகரமான நிலையும் வெகு திறமையாக முதலாளித்துவச் சக்திகளால் திட்டமிட்டே ஏற்படுத்தப்பட்டவையாகும். ஈழப்போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து தமிழ் பேசும் மக்கள் அனைவரும் இயக்கங்களின் மேல் வெறுப்புக்கொண்டு அமிர்தலிங்கம் ஐயாவின் காலடியில் ஐயா, நீங்கள் தான் கடைசியாக எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று விழ வேண்டும். அதன் பின்னர் அமிர்தலிங்கம் ஐயா எசமான் ஜெயவர்த்தனாவிடம் காவடி எடுப்பார். வட்டமேசைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுர மேசைகளில் ஒப்பந்தப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு எழுத்துக்களில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு உரிமைகள் வழங்கப்படும். அதன் பின்னர் மீண்டும் தேர்தல்கள்... வாக்குறுதிகள்... வெற்றிகள்... பதவிகள்.... சுகபோகங்கள்

இந்த உண்மையைப் புரிந்துகொண்டதால்.. இந்தச்சக்திகளை அம்பலப்படுத்துவதால்.... ஈழதேசத்தின் விடுதலை என்பது ஒரு புரட்சிக் கட்சியின் கீழ் அணிவகுக்கும் மக்களின் தீரமிகு போராட்டத்தின் மூலமே வென்றெடுக்கக்கூடியது என்ற உறுதியான கருத்தை தொடர்ந்து முன்வைத்து வருவதனாலேயே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கெதிரான பொய்ப்பிரசாரங்களும்... சேறடிப்புகளும்... தொடர்கின்றன. எந்தக் காலகட்டத்திலும் தரகுமுதலாளித்துவத் தலைமையோடு உடன்பாட்டிற்கு வரமாட்டோம் என்பதில் EPRLF உறுதியோடு இருக்கின்ற காரணத்தால் தரகு முதலாளித்துவத் தலைமையின் அடியொற்றி இதுவரைகாலமும் நடந்து இப்போது விவாகரத்து எடுத்திருக்கும் சிஷ்யர்கள் தமது வர்க்க நேசம் காரணமாக EPRLF க்கு எதிராகச் சேறடிப்பதிலேயே தமது முழு நேரத்தையும் செலவிடுகிறார்கள்.

ஆனால் நீளமானதும் கடினமானதுமான ஈழப்போராட்டத்தில் நாம் எதிரியின் சதிகளை மாத்திரமல்ல எதிர்ப்புரட்சிச் சதிகளையும் எதிர்நோக்குகிறோம். அதற்கமைவாகவே EPRLF இறுக்கமாக கட்டியமைக்கப்பட்டு வருகிறது. எமக்கெதிரான பொய்ப்பிரசாரங்களைக் கட்டவிழ்த்து விடுபவர்களை நாம் குறைகூறவில்லை... கொச்சைப்படுத்தவில்லை. மாறாகப் பரிதாபப்படுகிறோம். ஏனெனில் தமக்கிருக்கும் வர்க்கநேசத்தின் காரணமாக எம்மக்களின் இரத்தத்தை உறிஞ்சும் வர்க்கம் ஒன்றைப் பதவிக்குக் கொண்டுவர தம்மை அறியாமலே இவர்கள் செய்யும் இன்றைய செயல்களின் நாளைய பாதிப்பை உணரும் திறமை கூட அற்றவர்களாக இவர்கள் இருக்கிறார்களே என்று.

EPRLF ஐப் பொறுத்தவரையில் குழுக்களைக் கொண்ட ஒரு அமைப்பாகவோ அல்லது ஆயுத விளையாட்டுக்களைக் காட்டும் ஒரு அமைப்பாகவோ அது கட்டியெழுப்பப்படவில்லை. திட்டமிட்ட வகையில் பல வகையான மக்களின் தன்மைகளுக்கேற்ற அவர்களின் பணிகளை இணைக்கும் முன்னணி அமைப்புக்களின் இறுதியமைப்பாகவே எமது கட்சி அமைக்கப்பட்டுள்ளது. கட்சியின் இதர முன்னணிகளில் இணைந்து ஒருவர் புரியும் மக்கள் பணிகள், அவரது வர்க்கக் குணும்சம், கட்சியுடனை அவரது நேசம், ஆகியன கருத்தில் எடுக்கப்பட்டே தோழர்கள் EPRLF இன் உறுப்பினர்கள் ஆக்ககப்படுகிறார்கள். ஆயுத சாகசங்களை விட அரசியல் வேலைகட்கே EPRLF முன்னுரிமை கொடுக்கிறது. அது மாத்திரமல்ல 'மக்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் வீட்டிலிருங்கள். எங்கள் தேவைகளை மாத்திரம் பூர்த்தி செய்யுங்கள். நாங்கள் உங்களுக்கு ஈழத்தை வென்று தருகிறோம்! என்ற வழமையைத் தகர்த்து 'மக்களே போராட்டத்தில் நீங்களும் எங்களுடன் இணையுங்கள், வீதிக்கு வாருங்கள், அரசியல் கருத்துக்களை மனதில் பதியுங்கள். எதிரிக்கெதிராக புரட்சிகர யுத்தத்தில் ஆயுதம் ஏந்துங்கள்' என்று நாம் வைத்த புதிய கோஷங்கள் மக்களைப் போராட்டத்தில் பெருமளவு இணையவைத்தது. இது எதிரிக்கு மாத்திரமல்ல ஆயுத தர்ப்பார் நடத்த முனைந்தவர்களுக்கும் கிடைத்த பேரடிதான்.

EPRLF என்பது கனவுகளில் மிதப்பவர்களின் கூட்டம், பசைவாளிகள் கூட்டம், கட்டுப்பாடில்லாதவர்கள் கூட்டம் என்று எல்லாம் மணிமகுடங்கள் எமக்குச் சூட்டப்பட்டன. இந்தப் பொய்ப் பிரச்சாரச் சகதிக்குள்ளால் நாம் வளர்ந்தோம். எப்படி என்றால் எமது சித்தாந்தத்தை தேர்ந்தெடுப்பதில் நாம் தவறு விடவில்லை. சரியான அரசியல் சித்தாந்தத்தை தேர்ந்தெடுக்காமல் விட்டு அரசியல் அநாதைகளாய் நாம் நிற்கவில்லை. கடந்த காலங்களில் இலங்கைத் தீவில் இருந்து வந்த முற்போக்கு இயக்கங்கள் சிதைவுண்டமை, தமிழர் விடுதலை இயக்கங்கள் சின்னாபின்னப்பட்டுப் போனமை, என்பவற்றைப் படிப்பினைகளாகக்கொண்டு EPRLF செயற்பட்டு வருகிறது. இது மாத்திரமன்றி ஈழதேசத்தின் தன்மை, ஈழமக்களிடையே நிலவும் வேறுபாடுகள், முரண்பாடுகள் எமது பண்பாட்டுக் குணம்சங்கள் என்பவையும் ஆழமாகக் கவனிக்கப்பட்டு மார்க்சிய லெனினிச சித்தாந்தத்தின் அடிப்படையிலான ஒரு பாட்டாளி வர்க்க ஸ்தாபனமாகக் கட்டி எழுப்பி அதன் தலைமைத்துவத்தை ஈழ விடுதலைப் போராட்டத்தில் நிலைநாட்டுவது என்னும் நோக்கத்தின் அடிப்படையிலே EPRLF இன் அனைத்து வேலைத்திட்டங்களும் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

EPRLF இன் அரசியல் திறன், மக்கள் சக்தி என்பவை கடந்த காலத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் மக்கள் போராட்டங்கள் பேரணிகள் மூலம் பரிசோதிக்கப்பட்டன. ஆயுதப்போராட்டத்தைப் பொறுத்தவரை எதிரியைத் தோற்கடித்து ஈழ மக்களின் புரட்சிகர விடுதலையை வென்றெடுப்பதற்கு ஆயுதப் போராட்டமே பிரதான போராட்ட வடிவமாக உள்ளது என்று EPRLF அனுபவ ரீதியாகக் கண்டறிந்துள்ளது. ஆயுதப்போராட்டத்தை வஞ்சம் தீர்க்கும் நடவடிக்கையாகவோ தனி நபர்களின் வீர சாகசச்செயல்களாகவோ நாம் கருதாது எமது விடுதலைப்போராட்டத்தை மக்கள் யுத்தமாக முன்னெடுக்க முடிவு செய்கிறோம். மக்கள் யுத்தப் பாதையின் பணிகளை நிறைவேற்றும் வகையில் EPRLF இன் மக்கள் விடுதலைப் படையானது (PLA) ஏனைய வெகுசன அமைப்புக்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் ஈழப்போராட்டத்தை ஆழமாகவும் அகலமாகவும் நோக்குகிறோம் ஈழப்போராட்டத்துடன் இணைந்துள்ள சர்வதேச அரசியல் சூழ்நிலைகளை ஆய்வு செய்கிறோம். இவற்றின் மூலம் ஈழப் போராட்டத்தை இறுதியாகத் தலைமை தாங்கி முன்னெடுக்கப் போவது யார் என்பதை இனங்காண்கின்றோம். ஆம் ஈழமக்களிடையே உள்ள அனைத்து வர்க்கங்களும் ஈழப்போராட்டத்திற்கு தலைமை தாங்கக்கூடிய முன்னனிச் சக்தியாகிவிட முடியாது. தற்போதைய நவ காலனித்துவக் கட்டத்தில் தேசிய முதலாளித்துவத் தலைமைகள் நீண்ட காலத்தில் தேசத்தின் நீண்ட பொருளாதார விடுதலையை வென்றெடுக்க முடியாதவர்களாகப் போய்விடுகின்றமையால் படிப் படியாக அவர்கள் ஏகாதிபத்தியக் கரங்களுக்குள் விழுந்து அரசியல் விடுதலையைக்கூட இழந்து விடுகின்றனர்.

ஈழவிடுதலைப் போராட்டத்தில் இன்று பெருமளவு ஈடுபட்டிருக்கும் குட்டிமுதலாளித்துவச் சிந்தனை கொண்ட வர்க்கங்கள் உண்மையில் இப்போராட்டத்தை தலைமை தாங்கி நடத்த முடியாதவர்களாக உள்ளன. ஏனெனில் குட்டி முதலாளித்துவ சிந்தனை கொண்ட வர்க் கங்களுக்கு ஒரு திட்டவட்டமான வர்க்க நிலைப்பாடு கிடையாது. அவை முதலாளித்துவ வர்க்கம் தலைமை தாங்கும்போது அதனைச் சார்ந்தும், பாட்டாளி வர்க்கமும் தலைமை தாங்கும் போது இதனைச் சார்ந்தும் நிற்கின்ற ஊசலாடும் தன்மை கொண்டவை ஆகும். மேலும் இவ் வர்க்கங்கள் தனிநபர் பயங்கரவாதம், சா கசச் செயல்களில் அதீத நம்பிக்கை போன்ற தவறுகளுக்கு ஆட்ப டுகின்ற ஆபத்தும் உண்டு. ஆகவே இவர்கள் ஈழ தேச விடுதலைப் போராட்டத்தின் ஊக்க சக்தியாகக் காணப்படுகின்ற போதிலும் தலைமை தாங்கக்கூடிய முன்னணிச் சக்தியாக இருக்க முடியாது.

இதுகாலவரை ஈழவிடுதலைப்போராட்டத்தில் குட்டி முதலா ளித்துவ சிந்தனை கொண்ட வாலிப சக்தி திட்டவட்டமான வர்க்க நிலைப்பாடு இல்லாது இப்போராட்டத்தில் ஊக்க சக்திகளாகப் பங்காற்றியுள்ளது. பாட்டாளி வர்க்கத் தலைமையை ஏற்பதன் மூலமே இக்குட்டி முதலாளித்துவ சக்திகள் தொடர்ந்தும் முற்போக்குப் பாத்திரத்தை வகிக்க முடியும்.

இன்றைய காலகட்டத்தில் தேசிய விடுதலைக்காக உறுதியாகதொ டர்ந்து போராடி வென்றெடுக்கக்கூடியது பாட்டாளி வர்க்கமா கவே உள்ளது. எனவே ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு தலை மை தாங்குகின்ற முன்னணிப்படை ஈழத்தில் உழைக்கும் மத்தியில் இ ருந்து எழுச்சி பெறுகின்ற பாட்டாளி வர்க்க ஸ்தாபனமாகவே இ ருக்க வேண்டும்.

பல்வேறு நலன்களையுடைய வர்க்கங்கள் சமூக பிரிவுகள் தேசிய ஒடுக்குமுறையை எதிர்நோக்குவதால் அதற்கு எதிராகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடுகிறார்கள். இவ்வர்க்கங்களை சமூகப் பிரிவுகள் அனைத்தினையும் பாட்டாளி வர்க்க ஸ்தாபனம் தனது தலைமையில் அணிதிரட்ட வேண்டும். இதன் மூலமே ஈழவிடுதலைப்போராட்டத்தின் அனைத்துக் குறிக்கோள்களையும் நிறைவேற்ற முடியும்.

இந்த வகையில் சிக்கலான எதிர்காலத்தை நாம் எப்படி எதிர்கொள்ள வேண்டும்... என்ன செய்ய வேண்டும்:.. எங்கிருந்து தொடங்குவது ... என்பது பற்றிய தீர்க்கமான வழிமுறைகளை நாம் சிந்தித்துள்ளபடியாலும் எந்தக்கட்டத்திலும் தரகுமுதலாளித்துவத் தலைமையிடம் சரணடைய மறுப்பதனாலும் இன்று EPRLF இற்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் பொய்ப்பிரசாரங்கள் நாளைய சிவப்புவிடியலின்போது கரைந்து போகப்போவது வரலாற்றுக் கட்டாயமாகும்.

ஏனெனில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் போராடுவதற்காகத் திட்டமிடுகிறோம். திட்டமிட்டுப் போராடுகிறோம். எமது விடுதலைப்போராட்டத்தில் எவரும் தனி மனிதராகவோ அல்லது குழுவாகவோ அல்லது தனி அமைப்பாகவோ செயற்பட உரிமையுடையவர் ஆவர். அதனை நாம் மதிக்கிறோம். போராட்டத்தில் எமது நடவடிக்கைகள் தொடர்பான விமர்சனங்களை எதிர்பார்க்கிறோம். எமக்கெதிரான சில சக்திகள் மக்களைக் கிளறிவிட முயலும் செய்கையின் உண்மையான அர்த்தம் எமது புரட்சிகரப் போராட்டத்திலிருந்து மக்களைப் பிரிக்க முற்படும் நடவடிக்கையே ஆகும் என்பதை மீண்டும் நினைவூட்டுகிறோம். இத்தகைய மக்கள் விரோதிகளினதும், தேசத்துரோகிகளினதும், சந்தர்ப்ப வாதிகளதும், குழப்ப வாதிகளதும் தேசத்துரோகத் தன்மையை – செயற்பாட்டை முகத்திரைகிழித்து மக்கள்முன் அம்பலப்படுத்தி எமது விடுதலைப்போராட்டப்பாதையை தெளிவானதாக வைத்திருப்பது ஒவ்வொரு உண்மையான விடுதலைப் போராளியினதும் இன்றைய உடனடிப் பணிகளில் முதன்மையானதாகும்.

---

தோழர்களே!

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரான்சுப் பிரிவு, ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம் (EPIC) ஆகியவற்றுடனான அனைத்துத் தொடர்புகட்கும்....

EPIC (FRANCE)
10, RUE DES MARTYRS
75009 - PARIS.

தொலைபேசி: 48-74-98-30.

# ஈழத்தைப் பற்றி

சிறீலங்கா நவபாசிச அரசின் இன அழிப்புச் செயல்களும் அதற்கெதிரான ஈழப் போராளிகளின் தாக்குதல் நடவடிக்கைகளும் ஈழ தேசமெங்கும் தொடர்கின்றன. அரச கூலிப்படைகளின் வெறித்தனமான தாக்குதல்கள் தினமும் எம்மக்கள் பலரைப் பலியெடுத்து வருகின்றன. அதேசமயம் கூலிப்படையினருக்கெதிரான ஈழப் போராளிகளின் வீரம் செறிந்த போராட்ட நடவடிக்கைகளும் ஆக்கிரமிப்பாளருக்கு பலத்த இழப்பை ஏற்படுத்தி வருகின்றது.

5.3.86 அன்று யாழ். கோட்டை இராணுவ முகாமுக்குச் செல்லவிருந்த 125 கிராம சேவையாளர்கள் இளைஞர்களால் கடத்தப்பட்டு முகாமுக்குப் போகக்கூடாது என எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். இச்செயலுக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் உரிமை கோரியுள்ளது. சிறீலங்கா அரசு அறிவித்துள்ள மீன்பிடித்தடையின் காரணமாக இதுவரை மட்டும் கிழக்கரையில் தங்கியுள்ள 5000 குடும்பங்கள் பாதிக்கப்படும் என்றும் 2 இலட்சம் நபர்களோடும் பாதிக்கப்படுவார்கள் என்றும் கூறப்படுகிறது. 5.3.86 அன்று மட்டுநகர் இ.போ.ச.வின் ரூ. 3 இலட்சம் பெறுமதியான உதிரிப் பாகங்கள் இளைஞர்களால் கொள்ளையடிக்கப்பட்டன. 6.3.86 அன்று திருமலை கிண்ணியாவில் இரத்தவெறி பிடித்த சிங்கள ஊர்காவல் படையினரால் அறுபேரைக் கொண்ட தமிழ்க் குடும்பம் ஒன்று கோரத்தனமாக வெட்டிக் கொல்

லப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்தில் 5.3.86 அன்று இராணுவத்தினரின் துப்பாக்கி இருவரைப் பலி வாங்கியதுடன் பலரைப் பயப்படுத்தியுள்ளது. போராளிகளையும், மக்களையும் காட்டிக்கொடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பெயரில் கிளிநொச்சிப் பகுதியில் செல்வா தேவி (30வயது), யோகராஜ் (24வயது) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மரணதண்டனை வழங்கியுள்ளனர். 6.3.86 இல் வவுனியாப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் குண்டு வீச்சில் மேஜர் பலியானதுடன் பலர் படுகாயமும், பலத்த சேதமும் ஏற்பட்டது. இதேதினம் மட்டுநகரில் தனது காதலியுடன் கதைத்துக்கொண்டு நின்றிருந்த இளைஞர் யோகராசா (24வயது) கடற்படையினரால் விரட்டி 24தரம் சுடப்பட்டு கொல்லப் பட்டார்.

8.3.86 அன்று போராளிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்துக்கு தொண்டமனாறு இராணுவ முகாமில் சென்றிக்கு நின்ற சிப்பாய் பலியானான். இதேதினம் திக்கம் கடல்பகுதியில் இயந்திரப்படகில் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது போராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். 9.3.86 அன்று திருமலைப் பகுதியில் 8 இளைஞர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். 10.3.86 அன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஆரையம்பதி, நொச்சிமுனைப் பகுதியில் 3-ந்த இராணுவ வேட்டையில் ஜெயம் என்ற 19வயது வாலிபர் பலியானதுடன் 15பேர் கைதுசெய்யப்பட்டனர். வவுனியா மாவட்டத்திலுள்ள பறயனாலங்குளத்தில் நிரந்தர இராணுவ முகாம் அமைக்கப்பட்டதையடுத்து இங்கு வசித்து வந்த 300குடும்பங்கள் பீதியினால் இடம் பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர். 10.3.86 அன்று இப்பகுதியில் 3பெண்கள் உட்பட 10பேரைக் கடற்படையினர் கைதுசெய்தனர். பலாலி விமானத்தளம இராணுவ முகாம் விஸ்தரிப்புக்காக மயிலிட்டி வடக்குப் பகுதியில் வசிப்பவர்கள் 48மணித்தியாலங்களுக்குள் வெளியேற வேண்டும் என்று இராணுவ மிரட்டலுக்கு உள்ளாகியுள்ளனர். இதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படகொன்று சேர்ந்தி அதில் பயணம் செய்த 5 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். 12.3.86 அன்று வல்வெட்டிப்பகுதியில் நடைபெற்ற விமானக்குண்டுவீச்சில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் வீடுகள் சேதமடைந்து, கால்நடைகள் இறந்து, பயிர்களும் சிதைந்துள்ளன. 12 கவசவாகனங்கள், 3 ஹெலிகொப்டர்கள் சகிதம் 500 கூலிப்படையினர் அளுக்கோயில் மேற்கொண்ட தேடுதல் வேட்டையில் 7 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதுடன் படுகாயமடைந்து 30 பேர் கைது செய்யப்பட்டனர். இச்சம்பவங்களின் போது பெண்ணொருவர் தற்கொலை செய்துகொண்டார். 12.3.86 அன்று வல்வெட்டித்துறை இராணுவமுகாமிலிருந்து வெளிவந்த கூலிப்படையினர் மீது நாம் நடாத்திய தாக்குதலில் 4 கூலிப்படையினர் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

13.3.86 அன்று மயிலிட்டி கடலில் நடந்த ஹெலிகொப்டர் தாக்குதலில் நால்வர் பலியாகி நால்வர் படுகாயமடைந்தனர். கொல்லப்பட்டோரில் ஒன்றரை வயதுக் குழந்தையும் அடங்கும். கந்தளாய்-தம்பலகாமப் பகுதியில் ஜீப்பில் சென்ற இராணுவத்தினர் மீது நாம் நடத்திய தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டனராக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். திருமலையிலிருந்து 15 மைலுக்கு அப்பால் பயணப்பட்ட ரயிலும் இந்தில் T.T.புப் போராளிகளால் நிகழ்த்தப்பட்ட கண்ணிவெடித்தாக்குதலில் 3 படையினர் கொல்லப்பட்டதுடன் 2 பேர் படுகாயமடைந்தனர். 16.3.86 அன்று உழவு இயந்திரத்தில் வயலுக்கு வேலை செய்யவந்த அப்பாவிகள் மீது நடத்தப்பட்ட ஹெலிகொப்டர் தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டனர். வல்வெட்டித்துறையில் 12 பேரும், ஜோர்-மல்லிகைத்தீவில் 5 பேரும் சீருடையணிந்த கொலை வெறியரால் கொல்லப்பட்டனர்.

தொடர்ந்து எங்கள் மக்களின் சிந்தும் இரத்தம் எமது பாச பூமியை நனைத்துக் கொண்டிருக்கிறது. இத்தகைய இழப்புக்களின் மத்தியிலும் இறுதிவெற்றியடையும் வரை T.T.புப் போராட்டம் தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் புதிய ஏமாற்று நாடகங்கள்.

சர்வதேச அரங்கில் அடுக்கடுக்காகத் தனக்குக் கிடைத்து வரும் நெருக்குவாரங்களை உணர்ந்துகொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் தன்னை இப்போது ஜனநாயகத்தின் காவலன் என்றும், சர்வாதிகாரத்தின் எதிரியென்றும் கூறிக்கொண்டு புதிய முகமூடியைத் தரித்துக் கொண்டு உலக அரசியல் அரங்குக்கு வந்துள்ளது. ஈரான், நிக்கரகுவாவில் தனக்குக் கிடைத்த பேரடிகளைப் பாடமாகக்கொண்டு உலக மக்களை ஏமாற்றப் புதிய தந்திரத்தைத் தற்போது அமெரிக்க ஏகாதிபத்தியம் பாவிக்க முற்பட்டுள்ளது. இந்த ஏமாற்று வித்தைதான் கெயித்தி, பிலிப்பைன்சு ஆகிய நாடுகளில் பாவிக்கப் பட்டுள்ளது. இந்த நாடுகளில் இருக்கும் தனது படைத்தளங்களைப் பாதுகாப்பதற்காகவும் இந்நாடுகளிலும் அதைச்சுற்றியுள்ள இதர நாடுகளிலும் தனது சுரண்டல் சாம்ராச்சியத்தை விஸ்தரிப்பதற்காகவும், இதுவரைகாலமும் இந்நாடுகளின் அரச தலைவர்களாக இருந்த தனது கைப்பொம்மை ஆட்சியாளர்களை பதவியிலிருந்து விலகச் செய்து பத்திரமாகநாட்டைவிட்டு வெளியேற்றி அவர்களுக்குச் சரியான புகலிடம் அமைத்துக் கொடுத்து இந்தச் சர்வாதிகாரிகள் இரத்தத்தை உறிஞ்சி உண்டு கொழுத்து கொள்ளையடித்த கோடிக்கணக்கான பணத்தை அமெரிக்காவிலேயே முதலீடுசெய்ய அனுமதியளித்திருக்கும் அதேவேளையில் இவர்களது இடத்தை நிரப்பும் பொறுப்பை தானே தேர்ந்தெடுத்து, 'ஜனநாயகப்புரட்சி' என்ற வார்த்தைஜாலங்களின்கீழ் மக்களின் எழுச்சியைத்திசைதிருப்பி புதிய கைப்பொம்மை அரசுகளை பதவிக்குக்கொண்டுவரும் தனது கைங்கரியங்களை ஆரம்பித்துள்ளது.

கெயித்தி, பிலிப்பைன்சு ஆகிய நாடுகளின் சர்வாதிகாரிகள் பதவியிலிருந்து விரட்டப்பட்டுள்ளபோதும் இந்தப் புதிய ஏமாற்றுவித்தையையே அமெரிக்க ஏகாதிபத்தியம் அரங்கேற்றியுள்ளது. அமரிக்க ஏகாதிபத்தியத்திற்கு பக்கவாத்தியம் வாசிக்கும் சர்வதேச முதலாளித்துவ செய்தித்தொடர்புச் சாதனங்கள் இந்நாடுகளில் ஏற்பட்டுள்ள ஆட்சிமாற்றங்களை 'சனநாயகப்புரட்சி' 'மக்கள் எழுச்சி' என்றெல்லாம் வர்ணித்து வருகின்ற போதும் உண்மைநிலை அதுவல்ல. இவ்விரு நாடுகளில் அமைக்கப்பட்டுள்ள அரசாங்கங்களும் MADE IN AMERICA வே. அதாவது அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்டனவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணத்துக்குப் பிலிப்பைன்சில் பதவிக்கு வந்துள்ள திருமதி. அக்கினோவின் அரசாங்கம் நாட்டின் பெரும்பான்மை ஏழை மக்களையோ அன்றிப் பாட்டாளி மக்களையோ பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமைக்கப்படவில்லை. பிலிப்பைன்சின் மந்திரிசபை மார்க்கோசின் சகபாடிகளை குறிப்பாக பாதுகாப்பமைச்சரான என்றில், மார்க்கோசின் நீண்டகால ஆட்சிக்கூட்டாளி– பெரும் செல்வந்தர்– பிலிப்பைன்சில் அவசரகாலநிலை பிரகடனத்துக்குக் காரணமானவர்– அதன்மூலம் மார்க்கோசின் மனித வேட்டைகளுக்கு விருந்து படைத்தவர். இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் ஜெனரல் ரமோஸ் இவரும் மார்க்கோசின் இராணுவ அட்டூழியங்களுக்கு நீண்ட காலம் துணை போனவர். இவர்கள் மாத்திரமல்ல அக்கினோ அமைச்சரவையின் அத்தனை அங்கத்தவர்களும் நிலச்சுவாந்தர்களும் தொழில் நிறுவன உரிமையாளர்களும் வர்த்தகர்களும், செல்வந்தர்களுமே. யார் பிலிப்பைன்சு மக்களின் இரத்தத்தை உறிஞ்சி அவர்களை எலும்புக்கூடாக்கினர்களோ அவர்களே மீண்டும் பதவிக்கு வந்துவிட்டார்கள். புதிய தலைமையின் கீழ். அது மாத்திரமல்ல தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது தனது கணவரின் கொலை தொடர்பாக மார்க்கோசை விசாரணைக்குட்படுத்தித் தண்டனை வழங்குவேன் என்ற திருமதி அக்கினோ அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வேண்டுகோளுக்கிணங்க அந்த வாக்குறுதியை மௌனமாகவே காற்றில் பறக்க விட்டுவிட்டார். இதையொத்த அரசாங்கமே கெயித்தியில் டுவாலியேயின் சகபாடிகளைக் கொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்விரு நாடுகளிலும் பரீட்சித்துப் பார்த்த இவ்வேமாற்று வித்தையினை இதர நாடுகளிலும் மேற்கொள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதாவது அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு மிகவும் வேண்டப்பட்ட சர்வாதிகாரிகளான சிலியின் பினோசெற், தென்னுபிரிக்காவின் பொதா இவர்களுக்கெதிரான மக்களின் எதிர்ப்பு வலுப்பெறுவதையும் இந்நாடுகளில் ஒரு சிவப்பு புரட்சி உருவாகுவதற்கான காரணங்கள் முன்னெப்போதையும் விட இப்போது கூடுதலாகக் குவிந்துள்ளதையும் அமெரிக்க ஏகாதிபத்தியம் உணர்ந்து கொண்டது. எப்படி பிலிப்பைன்சில் புதிய மக்கள் இராணுவம் ஆட்சிப்பொறுப்பை ஏற்பதை அக்கினோ அரசாங்கத்தை பதவிக்குக் கொண்டுவந்து றேகன் நிர்வாகம் சற்றுப் பின் தள்ள முயல்கிறதோ எப்படிக் கெயித்தேயை நோக்கி கியூபா, நிக்கரகுவாவிலிருந்து வீசும் புரட்சிக் காற்று மக்களின் எதிர்ப்புப் போராட்டங்களுக்கு ஒரு புரட்சித் தலைமையை உருவாக்கி விடுமோ என்ற அச்சத்தில் சர்வாதிகாரியான டுவாலியேயை வெளியேற்றி இன்னுமொரு கைப்பொம்மை அரசை நியமித்ததோ அதே வேலையை சிலியிலும் தென்னுபிரிக்காவிலும் றேகன் நிர்வாகம் செய்ய முயல்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் முதற்படியாக மக்களின் வெறுப்பைச் சம்பாதித்த தனது கைப்பொம்மைச் சர்வாதிகாரிகளை விமர்சித்து தன்னை நியாய வானாகக் காட்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் முற்பட்டுள்ளது. இதன் முன்னோடியாக இத்தனை காலமும் ஏன் கடந்தவருடம் கூட ஐ.நா சபையின் மனித உரிமைகள் கூட்டத்தொடரில் சிலியில் பினோசெற் அரசுக்கெதிராக வரும் தீர்மானங்களுக்கு எதிர்த்து வாக்களித்து வரும் அமரிக்க ஏகாதிபத்தியம் இம்முறை சிலியின் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து தீர்மானமொன்றை ஜெனிவாவில் நடக்கும் ஐ.நா.சபை மனித உரிமைகள் கூட்டத்தொடரில் கொண்டுவந்துள்ளது. இது சிலியில் அமெரிக்க ஏகாதிபத்தியம் அரங்கேற்றப்போகும் ஏமாற்று நாடகத்தின் முதற்கட்டமாகும்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது அடுத்த நாடகத்துக்கான மேடையை தென்னாபிரிக்காவில் தேர்ந்தெடுத்துள்ளது. தென்னாபிரிக்க வீதிகளைத் தினமும் நிறைத்து நிற்கும் கறுப்பு இன மக்களின் போராட்டங்களும், அதற்குத் தலைமை ஏற்று நிற்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தரித்து நிற்கும் கம்யூனிசச்சின்னமும் றேகன் நிர்வாகத்துக்குப் பெரும் கலக்கத்தைக் கொடுத்துள்ளது. நிறவெறியாளனும் சர்வாதிகாரியுமான பொதாவுக்கு ஆயுதங்களை அள்ளி வழங்கி ஆயிரக்கணக்கான கறுப்பு இன மக்களைக் கொன்றொழித்து அந்தச் சடலங்களின் மேல் பொதா ஆட்சி நடத்தப் பாதுகாப்பு வழங்கி, தென்னாபிரிக்காவிலிருந்து வைரத்தையும், தங்கத்தையும் மாத்திரமல்ல அந்நாட்டு மக்களின் இரத்தத்தையும் இந்த நிமிடம் வரை உறிஞ்சிக் கொழுத்த அமெரிக்க ஏகாதிபத்தியம் தென்னாபிரிக்காவில் தனது கைப்பொம்மை அரசுக்கு ஏற்பட்டுள்ள நெருக்குவாரத்தை உணர்ந்துகொண்ட றேகன் நிர்வாகம் முதற்தடவையாக தென்னாபிரிக்காவில் பெரும்பான்மையினமான கறுப்பு இன மக்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்குத் தான் ஆதரவளிக்கும் என்றும் இதுவரை காலமும் எந்த ஆபிரிக்க தேசிய காங்கிரசுப் போராளிகளை பயங்கரவாதிகள் என்று றீகன் நிர்வாகம் பிரச்சாரம் செய்து வந்ததோ அவர்களை 'விடுதலைப் போராளிகள்' என்றும் 'நீதியான ஒரு இலட்சியத்திற்காகப் போராடுபவர்கள்' என்றும் வர்ணித்திருக்கிறது. இதன் மூலம் சிலரை மயக்கி தனது கைப்பொம்மை அரசான தற்போதைய வெள்ளையர் அரசுக்குப் பதிலாக இன்னுமொரு கைப்பொம்மை கறுப்பர் அரசை ஏற்படுத்துவதுதான் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நோக்கம்.

ஆனால் இத்தகைய ஏமாற்று வித்தைகளின் மூலம் இந்நாடுகளில் புரட்சிகர அரசுகள் ஆட்சிப்பொறுப்பை ஏற்கும் காலத்தை வேண்டுமானால் சற்றுத் தள்ளிப்போடலாம். ஆனால் அந்த நிலை வருவதைத் தடுக்க முடியாது என்பதை விரைவில் அமெரிக்க ஏகாதிபத்தியம் உணர்ந்துகொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இது இப்படி இருக்க அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதனுடைய சக பாடிகளும் புரிந்து வந்த நீசத்தனங்கள் உலக அரங்கில் அம்பலம் ஆக ஆரம்பித்துள்ளன. பிலிப்பைன்ஸ் மக்களிடம் அமெரிக்க கைப் பொம்மையான மார்க்கோஸ் கொள்ளையடித்த சொத்துக்களின் பெறுமதி 10 பில்லியன் டொலர்கள் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது மார்க்கோசுக்கு 350 மில்லியன் டொலர்கள் பெறுமதியான 5 உடமைகள் நியூயோர்க்கிலும் 200 உடமைகள் கலிபோர்னியாவிலும் மேலும் பல உடமைகள் லாஸ் ஏஞ்சல்ஸ் சான்டியாகோ போன்ற அமெரிக்காவின் பல பாகங்களிலும் இருப்பது அம்பலத்துக்கு வந்து உள்ளது. அத்தோடு பகாமாய் பிரேசில் சுவிற்சலாந்து, ஆகிய நாடுகளிலுள்ள வங்கிகளில் (சுவிசில் மாத்திரம் 800 மில்லியன்) பெருந்தொகை பணத்தை வைத்திருப்பதும் அம்பலத்துக்கு வந்து உள்ளது.

அத்தோடு மாத்திரம் நிற்காது றேகன் இரண்டாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது அவரது தேர்தல் செலவுக்காக 67 மில்லியன் டொலர்களை அளித்ததும் இமெல்டா மார்க்கோஸ் றேகனின் மனைவியான நான்சி றேகனுக்கு 10 இலட்சம் டொலர்கள் பெறுமதியான வைரச்சங்கிலி ஒன்றைப் பரிசாக அளித்த கதைகளும் அம்பலத்துக்கு வந்துள்ளன.

இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக உலக அரங்கில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உண்மைச்சொருபங்கள் வெளிவர ஆரம்பித்து உள்ளன. தொடர்ச்சியாக அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு கிடைக்க ஆரம்பித்திருக்கும் இந்த நெருக்குவாரங்களை வலுப்படுத்த ஈழ மக்களாகிய நாமும் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொடியினை உயர்த்திப் பிடிக்கவும் ஏகாதிபத்தியங்களுக்கெதிரான போராட்டங்களில் இணைந்து நின்று போர் தொடுக்கவும் வேண்டியது வரலாற்றுக் கட்டாயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்சில் இயக்க வேலைகள்
# ஈழ மக்களின் பங்களிப்புக்கள்.

இரண்டு தினங்களுக்கு முன், ஈழப் பிரச்சாரத்திற்குச் சென்றபோது ஒரு அனுபவம் ஏற்பட்டது. ஈழமக்களில் ஒரு தொகையினர் வசித்த அந்தக் கட்டிடத் தொகுதியின் அருகே ஒரு தமிழ் இளைஞரைக் கண்டு, அங்கே தமிழர்கள் வாழும் அறைகளைக் கண்டு பிடிக்க உதவுமாறு கேட்கப்பட்டது. எமது கோரிக்கையை அந்த இளைஞர் ஏற்றுக்கொண்டார். ஆனல், அவரதுமுகத்திலே ஒரு மிரட்சி தென்பட்டது. மாடிப்படியில் ஏறிக்கொண்டிருந்தபோது அவர் தமது வாயை மெல்லத் திறந்து உண்மை பேசினர். "உங்களுக்கு அறைகளை மட்டும் காட்டி விடுறன். ஆனல், நான்தான் காட்டினனன் எண்டு மட்டும் சொல்லிவிடாதீங்க!" என்ருர். "ஏன்" என்று கேட்டபோது – " இப்படித்தான் போனமுறை ஒரு இயக்கத்துக்கு இடங்களைக் காட்டி உதவி செய்தன். இயக்கம் போனவுடனே அறைக்காறர் என்னைப் பிடிச்சு ஏனடா றூம்களைக்காட்டிக் கொடுத்தனி என்று கேட்டு என்னைப் பேசினவை!" என்று பதில் வந்தது.

இந்த இளைஞர் எமது பார்வையில் ஒரு குற்றவாளி அல்லர். பிரான்சில் நடைமுறைச் சிக்கலிற்கு இந்த அனுபவம் ஒரு உதாரணம். இங்கே, இயக்க வேலைகள் செய்யும் போது ஏற்படும் அனுவவங்கள் பல. இந்த அனுபவங்களை அலசிப்பார்க்க வேண்டிய தேவை இயக்கங்களிற்கு உண்டு. அத்தோடு, இயக்கவேலைகளின் தேவைகளிற்கும் இங்கு வாழும் ஈழமக்களிற்கும் இடையெ உள்ள உறவு சரியான முறையின்படி விளக்கப்பட வேண்டும்.

ஈழம், இந்தியா, பிரான்சு. இந்த மூன்று இடங்களிற்கும் ஈழப் போராட்டத்திற்குமிடையே ஒரு இறுக்கமான பிணைப்பு உண்டு. போராட்டத்தின் தளம் ஈழம். தளத்திலே போராட்டத்தை நகர்த்துவதற்குப் பக்கபலமாக இந்தியாவும் பிரான்சும் இருந்து வருகின்றன. வெளிநாடுகள் என்று பார்க்கும் போது, ஈழப்போராட்டத்தில் பிரான்சு வகிக்கும் பாத்திரம் சாதாரணமான ஒன்று அல்ல. பிரான்சிலிருந்து கணிசமாக நிதியுதவி இயக்கங்களின் தலைமையகங்களுக்குச் சென்றுகொண்டிருக்கின்றன. ஈழம் இந்தியா ஆகிய இடங்களில் நடைபெறுவதைப்போன்று இங்கு இயக்க வேலைகளில் ஒரு சுறுசுறுப்புக் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சிலே இயக்க வேலைகளிற்குத் தடையான பல நடைமுறைச் சிக்கல்களை அவதானிக்க முடியும். இங்கு வாழும் ஈழ மக்கள் அனைவரும் ஒரே நிலைகளனில் உள்ளவர்கள் அல்லர். அவர்களது நிலைகள் மாறுபட்டுள்ளன. இது வாழ்க்கைத்தரம், பழக்கவழக்கங்களுடன் சம்பந்தப்பட்டது.

இங்கு வாழும் ஈழ மக்கள், ஈழப்போராட்டத்திற்கு உதவவேண்டிய ஒரு தார்மீகக் கடனிற்கு உரியவர்கள். இதற்காக, இங்குள்ள அத்தனைபேரும் "அள்ளி" வழங்கக்கூடிய தராதரத்தில் உள்ளவர்கள் என்ற மதிப்பீட்டைப் போட்டுவிட முடியாது.

* இயக்கங்களிற்கு உதவவேண்டியது எமது கட்டாயக் கடமை என்பதை அறிவுபூர்வமாக உணர்ந்தவர்கள்.
* இயக்கத்தைக் கண்டால் ~~கண்டால்~~ கதவை இழுத்துப் பூட்டி விட்டு இருப்பவர்கள்.
* இயக்கம் வந்துவிட்டது, எதையாவது கொடுத்து அனுப்பி விட்டால் போதும் என்று நினைத்து உதவுபவர்கள்.
* இயக்கத்தை தர்க்கரீதியான விமர்சனத் தளமாக மட்டுமே பாவிப்பவர்கள்.
* இயக்கங்களோடு இணைந்து இயங்குவதற்கு ஒத்துவராமல் தாமரையிலைத் தண்ணீர் போல இருக்கவேண்டும் என்ற மனப்பான்மை உள்ளவர்கள்.

இவ்விதமாக இங்குள்ள ஈழமக்களின் நிலைப்பாடுகளையும், போக்குகளையும் வகுத்துக்கொண்டு செல்லலாம்.

பிரான்சிலே அரசியல் அகதிகளாகிவிட்ட ஈழமக்கள் ஒரு விரிந்த உலகத்தைப் பார்க்க தங்கள் விழிகளைத் திறக்க வேண்டும்.

* நாங்கள் எங்கிருந்து வந்தோம்?
* நாங்கள் எப்படி அகதிகளானோம்?
* எங்களது எதிர்காலம் எப்படி இருக்கவேண்டும்?
* இங்கு இயக்க வேலைகள் எதற்காக நடைபெறுகின்றன?
* இந்த வேலைகளைச் செய்பவர்கள் எந்த அடிப்படையில் இயங்குகின்றனர்?
* ஈழத்திலே நமது சோதர, சோதரிகள் தொடர்ந்தும் செத்துக்கொண்டே இருக்கவேண்டுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இயக்கங்கள் ஆயுதங்களைத் தூக்கியதன் அடிப்படை நோக்கம் என்ன?

* எமது போராட்டம் தொடர வேண்டுமா? அல்லது இடையில் பொறிய வேண்டுமா?

ஆகிய கேள்விகளின் அடிப்படையில் சிந்திக்கத் தலைப்பட வேண்டும் இங்கு வாழும் ஈழ மக்கள் அனைவருக்கும் தெளிவு காணாது என்பது இதனது அர்த்தமல்ல. கணிசமானதொகையினரிடம் தெளிவு இன்னமும் ஏற்படவில்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இங்கே இயக்க வேலையில் ஈடுபட்டுள்ளவர்கள் சம்பளத்தின் அடிப்படையில் அதனைச் செய்வதில்லை என்பதை இங்குள்ள ஈழ மக்கள் உணரவேண்டும். இயக்க வேலைகளை ஒரு தனித்தியாகம் என்ற வகைக்குள் அடக்கலாம்.

இயக்கங்களிற்கு உதவத்தான் வேண்டும் என்று எவரும் கட்டளை போடுவதில்லை. அப்படிச் செய்வது நாகரீகமான ஒன்றல்ல. இயக்கங்களை அந்நியமாக நினைக்காது ஈழ மக்கள் தமது பிரச்சனைகளை அவற்றுடன் மனம் திறந்து பேசிக்கொள்ள முன் வரவேண்டும். ஈழமக்கள் தமது நிதியை மட்டும் கொடுத்தால் போதாது, இதயத்தையும் ஈழப்போருக்குத் தர வேண்டும்.

ஈழத்திற்கும் எமக்கும் இடையே இருக்கும் உண்மையான உறவில் இருந்து அந்நியமாகிப் போய்விடுவதன் மூலம் நாம் பெரிதாக எதையும் சாதித்துவிட முடியாது. அத்துடன், அத்தகைய ஒரு உறவை மறக்க நினைப்பதுஒரு குற்றம் என்ற கண்ணோட்டத்திலே எடுக்க முடியும்.

ஈழமக்கள் இன்று இயக்கங்களை பலவித கோணங்களில் "வரவேற்கின்றார்கள்" என்றால், அவர்கள் இன்னமும் சரியான முறையில் ஈழத்தில் நடைபெறும் பிரச்சனைகளை அணுகவில்லை என்றே அனுமானிக்க முடியும்.

சில விடயங்களில் எமக்கு தெளிவு தோன்றி இருத்தல் அவசியம். அவையாவன:—

* ஈழப்போர் ஏதோதானோ என்று தோன்றியதோ அல்லது வெறுமனே ஒரு கற்பனாவாதமோ அல்ல.

* தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளிற்கான தீர்வு ஈழம்

* இன்று இயக்கங்கள் தாக்குதல்களை மேற்கொள்ளாது விட்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் இராணுவம் தனது அட்டகாசத்தை இன்னமும் சிறப்பாக நடத்தியே தீரும்.

* எமது போராட்டம் தொடர்ந்துகொண்டே இருக்கும்.
* இலங்கை அரசு தன்னை நன்றாகப் பலப்படுத்திவைத்திருக்கின்றது.
* எமது நிலத்தில் தொடர்ந்துகொண்டிருக்கும் உயிரழிவிற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தே ஆக வேண்டும்.

இங்கே இயக்கவேலைகளில் ஈடுபட்டிருக்கும் தோழர்கள், ஈழ விடுதலைப்போராட்டத்தின் பங்காளிகளே. பொதுவாக ஈழமக்கள் அனைவருக்கும் ஈழவிடுதலைப் போராட்டத்தில் பங்கு உண்டு. இயக்கங்களைக் காணும்போது, இங்கு வாழும் ஈழ மக்கள் தம்மை பார்வையாளர்கள் வரிசைக்குத் தாழ்த்திக் கொள்ளும் முறையை மாற்றுவது அவசியம்.

இயக்க வேலைகளில் ஈடுபடுபவர்கள் உங்களை நெருங்கும்போது தோழமையுடன் அவர்களை அணுகுங்கள், உங்களிடம் சிலவேளை சில இயலாமைகள் இருக்கலாம். அவை இங்கே முக்கிய அம்சங்களல்ல. உங்களது உணர்வுகளே இங்கு முக்கியம். உங்கள் உணர்வுகளை இயக்கங்களுடன் பரிமாறுங்கள்.

— ஜே.ஜே. ஜோசன் —

தோழர்களே!

'தமிழ் முரசு' உங்களிடமிருந்து ஈழவிடுதலை தொடர்பான கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் போன்றவற்றையும், சர்வதேச விடுதலைப் போராட்டம் தொடர்பான ஆக்கங்களையும் எதிர்பார்க்கிறது. இவை மாத்திரமல்ல 'தமிழ் முரசு' தொடர்பான உங்கள் விமர்சனங்களையும் எதிர்பார்க்கிறது. அனைத்துக்கும் தொடர்புகொள்ளுங்கள்....

EDITOR,
'TAMIL MURASU'
EELAM LIBARATION COUNCIL
(FRANCE)
10, RUE DES MARTYRS
75009 - PARIS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "விடுதலை நோக்கில் மக்களேபிரதானம்"

—ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி.

"மக்களிடையே திட்டமிடப்பட்டு வ்ளர்க்கப்பட்ட இவ்வாயுதமனோபாவம் இன்று மக்களுக்கெதிராகவே அதன் உயர்ந்த வடிவத்தில் வெளிப்பட்டுள்ளது. இயக்கங்களுள்ளே நடைபெற்றகொலைகளையும் இயக்க மோதல்கள் படுகொலைகளையும் எமது வரலாறு முழுமையும் நாம் கண்டித்து வந்தோம்"

"மக்களை ஒடுக்கும் அரசுக்கெதிராக மக்களின் விடுதலையை வென்றெடுப்பதற்கான போராட்டத்தில் மக்களே பிரதானமான தீர்க்கமான சக்திகள் ஆவர். ஒடுக்குமுறையின் தார்ப்பரியத்தை அரசியல் ரீதியில் புரிந்து கொண்டு ஸ்தாபனமயப்பட்ட மக்களுக்கு அவர்கள் நடத்தும் போராட்டத்திற்கு துணையான அம்சமே ஆயுதங்கள் ஆகும். இவ் அடிப்படைக் கோட்பாட்டை என்று இயக்கங்கள் ஏற்றுக்கொள்ள, இதனடிப்படையில் செயற்பட மறுத்தனரோ, என்று இதனை மீறினவோ, அன்றே ஈழவிடுதலைப்போராட்டத்தில் 'அராஜகம்' சருக்கட்டத்தொடங்கி விட்டது.

இடப்பெயர்ந்த பல்கலைக் கழகமாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டம் ஆயுத முனையில் முறியடிக்கப்பட்டபோது அதை 'அராஜகம்' என வர்ணித்தோம். கண்டித்தோம். அதன் பின்னல் தொடர்ச்சியாக நடைபெற்ற அராஜகச் செயற்பாடுகளுக்கெதிராக குரல் எழுப்பினேம்,

ஆனல் அராஜகச் செயற்பாடுகள் தொடர்ந்தன. தமது "வெற்றிகரமான தாக்குதல்களால்" இந்த அராஜக உள்ளடக்கம் மூடிமறைக்கப்பட்டது. இந்த உண்மை மக்களுக்கு அப்போது புரியவில்லை. இன்று 'அராஜகம்' மக்களைக் குறிபார்த்து, பெண்கள் மீதும் தன் துப்பாக்கி ரவைகளைப் பாய்ச்சி இருக்கிறது. பொது மக்களைப் படுகொலைசெய்திருக்கிறது

ஆனல் இன்று அராஜகத்தின் இவ் அடக்குமுறை வடிவம் மக்களைப் போராடத் தூண்டியிருக்கிறது. அராஜகத்திற்கெதிராக போராக்கொடி உயர்த்தும் மக்கள் எமக்கு எச்சரிக்கை செய்கிறார்கள் என்பதை உணர்கின்றோம் "துப்பாக்கி என்ன செய்யும்" என்று மக்கள் கேட்கத்தொடங்கி விட்டார்கள் ஈழப் போராட்ட வரலாற்றில் இது ஒரு "சிவப்பு விளக்கு"

உணர்ந்துகொள்ளத் தவறினல், எந்தத்துப்பாக்கிகளைக் கொண்டும் கிளர்ந்தெழும் வெகுஜனங்களை அடக்கமுடியாது நினைவிலிருக்கட்டும். அடக்கு முறை புரட்சியைத் தூண்டும் இது எதிரிக்கு மட்டுமல்ல எம்மவர்க்கும் பொருந்தும்.

அராஜகத்திற்கெதிராக போராடும் மக்களோடு ஒன்றிணைவோம். தீர்க்கமான தீர்வுவரை போராடுவோம்.

## இதோ புறப்பட்டு விட்டது

ஓ! விடுதலைத் தோழனே!
நாங்கள்
வறுமைப் போராட்டத்தில்
தோற்றுப்போன வேளை
காலனித்துவச் சுரண்டலுக்கு
கடத்தப் பட்டோம்

எமது வயிற்றுப்பசி
குடல்களை ஆலிங்கனம்
செய்தது

தேயிலைச் செடிகளை
ஆதரவாய் நம்பி
பற்றிக் கொண்டு
நிமிர முயன்றோம்

எங்கள் பசி உடலில்
மலை அட்டைகள்
இரத்த வேட்டையாடியது

முதலாளித்துவ அட்டைகள்
எம்முழைப்பு இரத்தத்தை
உறிஞ்சிய போது
போராட்டப் புல்தரையில்
தொழிற்சங்க அட்டைகள்
தோன்றின

அவை சந்தா இரத்தத்தில்
பெருத்து விட்டன

எமது உரிமைகளோ
தீரா நோயானது

மருத்துவர்கள்
போராட்ட அறைகளில்
அரசியல் அறுவை
நடாத்துகின்றனர்

நோயாளி என்னை
ஈழத்து விடுதலை
முழக்கம்
விழிப்படையச் செய்துவிட்டது

காடுகள் சாய்த்து
கழனியாக்கிய கரங்கள்
விடுதலை ஒளியைத்தேடி
போராட்ட இரவுகளைக்
கடக்க

போராட்ட விளக்கேற்றி
இதோ புறப்பட்டு விட்டது
பாட்டாளித்துவ
போரணி!

[illegible].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுப்போடு வாழ்ந்த நெருப்புக்கள் நாங்கள் எரிப்பதற்காக எழுந்து வருகிறோம்!

அரச இயந்திரங்களுக்கெதிரான போர்க்களத்தில் உறுதியாக உயர்ந்து நிற்கும் போராட்டங்களில் பெருமளவில் ஈழப்பெண்களும் பங்கெடுக்கத் தொடங்கிவிட்டனர். ஈழப்பெண்களை ஈழப் போராட்டத்தில் இணைக்கும் பணியில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் அமைப்புகளில் ஒன்றான ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி ஆற்றிவரும் பங்களிப்பு செம்மையானதாகும். இன்று ஆயிரக்கணக்கான ஈழப்பெண்கள் ஈழப் பெண்கள் விடுதலை முன்னணியின் பதாகையின் கீழ் EPRLF இன் தலைமையை ஏற்று விடுதலைப் போராட்டங்களிலும் ஏன் இன்றும் சிலர் புரட்சிகர ஆயுதப் போராட்டத்திலும் பங்குகொண்டு தமது வரலாற்றுக் கடமையைச் செலுத்திவருகின்றனர்.

இந்த ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, பெண் ஒடுக்குமுறை, வர்க்க ஒடுக்குமுறை, சிறீலங்கா அரசின் அடக்குமுறைகள், குறிப்பாகப் பெண்களைக் கைதுசெய்தல், விபசாரத் தாக்குதல்கள் ஆகியவற்றை வன்மையாகக் கண்டித்து 8.3.86 அன்று நடைபெறவிருக்கும் ஈழப் பெண்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் அனைத்து ஈழப்பெண்களையும் கலந்துகொள்ளுமாறு ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி கோரிக்கை விடுத்தது. இக்கோரிக்கையை ஏற்று பல்வேறு ஈழ மகளிர் அமைப்புகள் உட்பட ஆயிரத்துக்கும் அதிகமான ஈழப்பெண்கள் கலந்துகொண்டு 10 மைல் தூரம் சென்ற மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை மேற்கொண்டு ஈழப் பெண்களின் எழுச்சியை வெளிக்காட்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அடுப்போடு வாழ்ந்த நெருப்புக்கள் நாங்கள்
எரிப்பதற்காக எழுந்து வருகிறோம்', 'ஈ.பி போரே
எமக்கு வேண்டும் இயக்கப் போர் எமக்கு வேண்
டாம்', 'பெண்கள் என்ன போகப் பொருளா?'
என்பன போன்ற பல கோஷங்களை ஊர்வலத்
தில் கலந்துகொண்ட ஈ.பியின்பெண்கள் எழுச்சியுடன்
கோஷித்ததுடன் சுலோக அட்டைகளையும் தாங்கி
ச்சென்றனர். முற்போக்கான பெண்களே இந்
திரள் ஊர்வலத்தில் கலந்துகொண்டதும், யாழ்.
மாவட்டத்தின் நாலாபக்கங்களிலிருந்தும் ஏரா
ளமான பெண்கள் இவ்வூர்வலத்தில் பங்கெடுத்
ததும் புரட்சிகரமான அம்சங்களாகும். ஊர்
வலம் நெடும்பாதையிலும் பல புதிய புதிய பெண்
அணிகள் ஊர்வலத்துடன் இணைந்து கொண்டன.
ஊர்வல முடிவில் ஈ.பி.யின் பெண்கள் விடுதலை முன்
னணியின் தோழர் செந்தூரனின் தலைமையில்
பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. 'இதில்
உரையாற்றிய EWLFஇன் தோழர் ராதா இன்றை
யும் பலைக்கிறார்கள். பெண் விடுதலைபற்றி நிறைய
எழுதுகின்றனர். அதுவும் எல்லாம் எழுத்து வடிவி
லேயே நின்று விடுகிறது. இந்த சமூக அமைப்பை
உடைத்தெறியாத வரையில் எமக்கு நிச்சயமாக
விடுதலை கிடைக்கப் போவதில்லை' என்றார். தோழர்
செந்தூரனை தனது உரையில் 'பெண்களாகிய
நாம் திரண்டு எம் மேல் உள்ள சகலவிதமான
ஆண் ஆதிக்க, சமூக ஆதிக்க, இன ஆதிக்க
அதிகாரங்களை உடைத்தெறியப் போராடுவோம்'
என அறைகூவல் விடுத்தார். கிராமிய முற்
போக்கு பெண்கள் அணியைச் சேர்ந்த தோழர்
கவிதா 'இன்றைய காலகட்டத்தில் எல்லாவகை
யிலும் பெரும் பாதிப்புக்குள்ளாகுபவர்கள் உழை
க்கும் பெண்களேயென்றும், இந்த உழைக்கும்
பெண்கள்தான் வைராக்கியம் உள்ளவர்கள்,
போராட்டத்தில் உறுதியாக நிற்கக் கூடியவர்
கள், ஈ.பி போராட்டத்தில் பெண்கள் அணிக்கு
தலைமை தாங்க வேண்டியவர்கள் என்று குறிப்பிட்
டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EWLF ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி அறிக்கை EWLF

''சர்வதேச மகளிர் தினமானது, ஏகாதிபத்திய யுத்தம், இராணுவ வாதம் என்பனவற்றுக்கு எதிராக தேசியசுதந்திரம், பெண்கள் சமத்துவம் என்பனவற்றைப் பெறுவதற்காகப் பெண்கள் நடாத்துகின்ற போராட்டத்துக்குரிய தினமாகும்''.

''உலகின் பல்வேறு நாடுகளிலும் சர்வதேச மகளிர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இது 1910ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 1921ம் ஆண்டிலிருந்தே நடைமுறைக்குவந்தது.

''இன்றைய காலகட்டத்தில் ஈழப்பெண்களின் நிலையை நாம் நோக்க வேண்டும். பெண்கள் என்ற ரீதியில் எமக்கு வீடுகளில் சமத்துவம் கிடைக்கிறதா? இல்லை. பெண்கள் என்பதனால் பெற்றோர், ஆண்சகோதரர்கள், கணவன், மூத்தமகன் போன்றோரால் எமது சுதந்திரங்கள் நசுக்கப்பட்டு அடக்கப்பட்டு நாம் நாம் அடக்கி ஒடுக்கப்படுகிறோம்.

''எமது வீதிகளால நாம் சுதந்திரமாக, தனியாக, பயமின்றி எமது வேலைகளுக்குச் சென்றுவர முடிவதில்லை. சமூகப் பார்வைகள், கற்பழிப்புகள், தூஷணவார்த்தைப் பிரயோகங்கள் எனப்பல 'துகிலுரியும்' பிரச்னைகளை நாம் அன்றாடம் எதிர்நோக்குகிறோம்

''எமது எதிர்கால வாழ்க்கையை நாமே தீர்மானிக்க எமக்கு உரிமையில்லை. சீதனப் பிரச்னையோ விஸ்வரூபம் எடுத்து தலைவிரித்தாடுகிறது.

''குறிப்பாக மலையகப் பெண்களுக்கோ சரியான கல்வி வசதியில்லை. பசி, பட்டினி, வறுமை, வேலைநேரத்தில் காற்று. மழை, பனி, வெயில், போஷாக்கின்மை; இதனால் குறைப் பிரசவங்கள்; இதனால் இறப்புகள், குழந்தைகளைப் பராமரிக்கும் பிள்ளைப்பராமரிப்பு நிலையங்களின் சீர்கெடுதல், குடியிருப்பு வசதியீனங்கள் இப்படி- அடுக்கிக் கொண்டே போகலாம்.

''இதே போலத்தான் முஸ்லிம் பெண்களுக்கும் கலாச்சாரம், பண்பாடு என்ற போர்வையில் மிகவும் மோசமான, பிற்போக்குத்தனமான கலாச்சாரக் கட்டுப்பாடுகள்.

இவை ஒருபுறம். மறுபுறமோ ஸ்ரீலங்கா அரசின் கூலிப்படைகளின் வெறியாட்டம் பெண்களின்மீது அதிகரித்து வருகிறது. பெண்களைக்கைது செய்தல், கற்பழித்தல், வதைமுகங்களில் பாலியல் வதைகளைச் செய்தல், கூலிப்படைகளின் துப்பாக்கிச் சனியனுக்கும், விமானக் குண்டுத் தாக்குதல்களுக்கும் பலியாதல் இப்படிப் பல.

''ஈழப்பெண்கள் விடுதலை பெற வேண்டுமாயின் எமது வாழ்க்கை அமைப்பு முறையிலும், சிந்தனையிலும், புரட்சிகர மாற்றங்கள் ஏற்பட வேண்டும்''

---

தோழர்களே!

சிறீலங்கா நவபாசிச அரசு ஈழமக்களுக்கெதிரான உயிர்ப்பு நடவடிக்கைகளில் மாத்திரமல்ல கலை, கலாச்சார அழிப்புகளிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இக்கட்டத்தில் எமது கலைகளைப் பேணிக்காக்க வேண்டியது எமது கடமையாகும். ஈழமக்கள் செய்தித் தொடர்பகமும் இவ்விடயத்தில் தனது சிறு பங்களிப்பை 'சங்கே முழங்கு' புரட்சிகர கலை, கலாச்சார நிகழ்ச்சியினூடாக செய்துவருகிறது. நீங்கள் உங்கள் கருத்துக்களையும், EPICஇன் பணியை மேலும் பலப்படுத்த விரும்பின் EPIC பிரான்ஸ் கிளையை (10, RUE DES MARTYRS, 75009-PARIS) தொடர்புகொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நோக்கு

## நிக்கரகுவா எதிர்ப்புரட்சியாளருக்கு நிதி வழங்க முயன்ற றேகனின் பிரேரணை தோல்வி!



நிக்கரகுவாவின் சான்டினிஸ்ரா புரட்சிகர அரசைக் கவிழ்க்கும் சதிகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் துணையுடன் ஈடுபட்டுவரும் எதிர்ப்புரட்சியாளருக்கு மேலதிகமாக 100 மில்லியன் டொலர்களை வழங்க வேண்டும் என்று கோரிய றேகனின் பிரேரணை அமெரிக்கக் காங்கிரசில் 222 — 210 வாக்குகளால் தோல்வியடைந்துள்ளது. இம் மேலதிக நிதியின் மூலம் எதிர்ப்புரட்சியாளருக்கு நவீனரக ஆயுதங்களையும், பயிற்சியாளர்கள் மூலம் விசேட பயிற்சிகளையும் றேகன் வழங்க இருந்தான். எனவே இப்பிரேரணை அமெரிக்கக் காங்கிரசில் நிறைவேறுவதற்காக றேகன் தனிப்பட்ட முறையிலும், தொலைபேசி மூலமும் பல காங்கிரஸ் பிரதிநிதிகளைத் தொடர்பு கொண்டும், றேகனின் பேச்சாளர் இப்பிரேரணையின் ஆதரிப்பிற்கு எதிரான வாக்குகள் ஒவ்வொன்றும் கம்யூனிசத்துக்கு ஆதரவான வாக்குகள் என்று அறிவித்தும் கூட இப்பிரேரணை தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது. அதே வேளையில் பொஸ்ரன், சான் பிரான்சிஸ்கோ போன்ற அமெரிக்காவின் பல மாநிலங்களிலும் அமெரிக்க மக்கள் மேற்படி எதிர்ப்புரட்சியாளருக்கு நிதி வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிக்கரகுவாவிற்கெதிரான ரேகனின் பொய்கள் அம்பலமாகின்றன!

நிக்கரகுவாவின் புரட்சிகர அரசை தனது காலடிக்குக் கொண்டுவரத் துடிக்கும் ரேகனின் பச்சைப் பொய்கள் அம்பலமாகியுள்ளன. பிரேசில் உட்பட பல இலத்தீன் அமெரிக்க நாடுகளின் கொரில்லாக்களுக்கு நிக்கரகுவா ஆயுதப் பயிற்சி யளித்து வருகிறது என்ற ரேகனின் கூற்றை பிரேசில் மறுத்து பிரேசிலில் கொரில்லாக்களே இல்லை என்று கூறியுள்ளது. இதுபோல கொலம்பியாவின் M-19 இயக்கத்தையும் நிக்கரகுவாவையும் தொடர்புபடுத்திய ரேகனின் கூற்றும் கொலம்பியாவால் மறுக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தையும் விட மோசமாக நிக்கரகுவா அரசு சர்வதேச போதைவஸ்து கடத்தலில் ஈடுபட்டு வருகிறது என்ற ரேகனின் கூற்றை அமெரிக்க புலனாய்வுத்துறை மறுத்துள்ளதுடன் ரேகனின் இக்கூற்றுக்கு தன்னிடம் ஒரு சிறு ஆதாரம் கூட இல்லையென்று கூறியுள்ளது. ரேகன் இந்தப் பொய்களை பகிரங்க உரையின் போதே கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மற்றொரு சர்வதேசப் பயங்கரவாதம்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சர்வதேசப் பயங்கரவாத நடவடிக்கையொன்று இம்முறை லிபியாவுக்கெதிராக நிகழ்த்தப்பட்டுள்ளது. லிபியாவின் உறுதியான ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையை தன்னுடைய ஆயுதபலத்தால் மிரட்டும் வகையில் லிபியாவை அண்மித்த கடற்பகுதியில் ஆயுத தாக்குதல் ஒத்திகை நடத்திவந்த அமெரிக்க விமானங்கள் லிபியாவுக்கு ஆத்திரமூட்டும் வகையில் லிபியாவின் கடல் பிராந்தியத்துக்குள் நுழைந்ததையடுத்து லிபிய ஏவுகணைகள் மேல் அவற்றின் மீது தாக்குதல் நடத்தியது. இதைத் தொடர்ந்து அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது ஆயுத ஒத்திகைத் தளத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டும் வகையில் லிபியாவின் இரு ரோந்துப் படகுகளைத் தாக்கி நிர்மூலஞ் செய்ததுடன் லிபியாவின் ஏவுகணைத் தளத்தின் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இந்த அத்துமீறிய செயல் உலகநாடுகளின் பலத்த கண்டனத்துக்குள்ளாகியுள்ளது.

## பிலிப்பைன்சில் புதிய மக்கள் இராணுவத்தின் போராட்டம் தொடர்கிறது.

பிலிப்பைன்சின் புதிய ஜனாதிபதியாகிய திருமதி அக்கினோவின் போர்நிறுத்த வேண்டுகோளை நிராகரித்து பிலிப்பைன்சின் விடுதலைக்கான தனது புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை புதிய மக்கள் இராணுவம் (NPA) தொடர்கிறது. நீக்ரோஸ் தீவிலும், மற்றும் வேறிடங்களிலும் அரச படையினருக்கெதிராக NPA மார்ச் மாதத்தில் பல தாக்குதல்களை நடத்தியுள்ளது. போர்நிறுத்த வேண்டுகோளை நிராகரித்துக் கருத்துத் தெரிவித்த NPA யின் பேச்சாளர் முன்னைய மார்க்கோசின் சகபாடிகளும், நிர்வாக பாதுகாப்பமைச்சர் என்றில், இராணுவத் தளபதி ராமோஸ் ஆகியோரைப் பதவியிலிருந்து விலக்குதல், பிலிப்பைன்சிலிருக்கும் அமெரிக்கத் தளங்களை அகற்றுதல் இவற்றுக்கு அக்கினோவின் அரசு சம்மதிக்கும் பட்சத்திலேயே NPA பேச்சுவார்த்தைக்குப் போகும் என்று கூறியுள்ளார். NPA யின் அரசியல் பிரிவான தேசிய ஜனநாயக முன்னணி (NDF) அமெரிக்க - மார்க்கோஸ் சர்வாதிகாரக் கூட்டு அழிக்கப்பட்டு விட்டாலுங்கூட பாசிசத்துக்கான நிர்மாணங்கள் அப்படியே இருக்கின்றன எனக் கருத்துத் தெரிவித்துள்ளது. அதே வேளையில் புதிதாக அமைக்கப்பட்ட அக்கினோவின் அரசு உட்பூசல்களாலும், சரியான அரசியல், பொருளாதாரத் திட்டமின்மையாலும் தனது எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கி உள்ளது. இதற்கெதிராக NPA யின் வளர்ச்சி நாடுமுழுவதும் தீராவகையில் அதிகரித்துச் செல்வது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோவியத் - சீன உறவுகளில் முன்னேற்றம்.

சோவியத் யூனியனுக்கும் சீனாவுக்குமிடையிலான உறவுகள் தொடர்ச்சியாக முன்னேற்றமடைந்து வருகின்றன. இரு நாடுகளும் சமீபத்தில் பொருளியலாளர்களையும், தொழில்நுட்ப வல்லுனர்களையும் பரிமாறும் ஒப்பந்தமொன்றையும் செய்துள்ளன. சீனாவின் 17 பழைய தொழிற்சாலைகளுக்கு சோவியத்தின் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. 1950இல் 11,000 சோவியத் விஞ்ஞானிகளும், தொழில்நுட்பவியலாளர்களும் சீனாவில் பணிபுரிந்தும் இருநாடுகளுக்கிடையே ஏற்பட்ட பேதத்தால் 1960இல் இவர்கள் வெளியேறியதும் குறிப்பிடத்தக்கது. எது எப்படியிருப்பினும் சீனாவின் தொழில்துறை வளர்ச்சியில் சோவியத்யூனியன் வழங்கிய பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

## ஸ்ரீலங்காவுக்கு எதிராக இந்தியா ஐ.நாவில் குற்றச்சாட்டு.

'மனித உரிமைகளை மீறும் வகையில் இலங்கையிலுள்ள அப்பாவித் தமிழ் மக்களை அரசாங்க ஆயுதப்படைகள் வகைதொகையின்றி சுட்டுக்கொலை செய்து வருகின்றன. இலங்கையில் தமிழ் சிறுபான்மையினருக்கு எதிராக நடைபெறும் தாக்குதல்களில் போராளிகளுக்கும், அப்பாவிச் சிவிலியன்களுக்குமிடையே வேறுபாடு காட்டப்படுவதில்லை. ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் அனைவருமே கொல்லப்படுகிறார்கள். இராணுவப்படை, விமானப்படை ஆகியவற்றின் மூலம் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிக்கும் ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கை தமிழினம் முழுவதையும் பலிவாங்குவதற்கான ஆரம்பம் மட்டுமே"... இவ்வாறு ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் இந்தியா ஸ்ரீலங்கா மீது குற்றஞ்சாட்டியுள்ளது. 1லட்சத்து 25 ஆயிரத்துக்கு அதிகமான இலங்கைத் தமிழர்கள் இந்தியாவிலும், 45 ஆயிரத்துக்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் மேற்கு ஐரோப்பாவிலும் அடைக்கலம் கோரியுள்ளதாகவும் இவர்கள் தொடர்ந்தும் இலங்கை திரும்ப வருவதற்கான சந்தர்ப்பம் தோன்றவில்லை என்றும் இந்தியா கூறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிலங்காவின் வெளிநாட்டுத் தொடர்புகள் குறித்து இந்தியா கவலை!

சிறிலங்காவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையில் அதிகரித்து வரும் இராணுவத் தொடர்புகள் குறித்தும், வெளிநாட்டு அமைப்புகள் சிறிலங்காவில் நிலைகொண்டிருப்பது குறித்தும் இந்தியா தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளதுடன் இலங்கையில் தமிழ் மக்கள் பெருமளவில் கொல்லப்படுவதையிட்டுக் கண்டனமும் தெரிவித்துள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சின் 85/86 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் இவை தெரிவிக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சிறிலங்கா அரசு இராணுவத் தீர்வொன்றை நாடி வருவதையும் குறிப்பிட்டுள்ள இவ்வறிக்கை சிறிலங்க ஜனாதிபதிமீது இந்தியப் பிரதமர் வைத்த நம்பிக்கை அடிபடுவதைக் காட்டுவதாக அமைந்துள்ளது என அவதானிகள் கருதுகின்றனர்.

## இலங்கையில் அமெரிக்கா கண் வைக்கிறது! இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்!

இலங்கையில் கடற்படைத் தளமொன்றைப் பெறுவதற்காகவும், இந்து மா கடலில் இராணுவத் தளமாக்கல் முயற்சிக்காகவும் அமெரிக்கா இலங்கையைப் பயன்படுத்துகிறது. 'பாகிஸ்தான், இலங்கை மற்றும் வேறு இடங்களின் தளங்களின் வசதியோடு அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்தியாவை இராணுவ ரீதியில் சுற்றிவளைக்க முயல்கிறது' எனக் கூறி அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கெதிரான கண்டனத் தீர்மானத்தினை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (CPI) பாட்னாவில் நடைபெறும் தனது 13வது காங்கிரசில் நிறைவேற்றியுள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சியின் இக்காங்கிரசுக்கு ரோஜாப்பூக்கள் புரட்சி வாழ்த்துடன் செங்கொடியும் வைத்து கொள்ள அனுப்பப்பட்டதும், காங்கிரசுக்கான தனது புரட்சிகர வாழ்த்துச் செய்தியை EPRLF வெளியிட்டதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகச் செய்திகள் .........

- அமெரிக்க ஏகாதிபத்தியம் நெவேடா எனும் இடத்தில் வைத்து நிலத்துக்கடியிலான அணுக்குண்டு வெடிப்புச் சோதனை ஒன்றை மேற்கொண்டுள்ளது. இத்தகைய சோதனைகளை நிறுத்துமாறு சோவியத் யூனியனும் அமெரிக்கக் காங்கிரஸின் 50 பிரதிநிதிகளும் கேட்டிருந்தும் ரேகன் நிர்வாகம் இக் குண்டு வெடிப்புச் சோதனையை நடத்தியுள்ளது.

- உலகின் மிகப் பெரிய விமானந்தாங்கிக் கப்பலான அமெரிக்கக் கடற்படையின் யு.எஸ்.எஸ். எண்டர்பிறைஸ் கப்பலின் பாகிஸ்தான் விஜயத்துக்கு எதிராக ஆயிரக்கணக்கான பாகிஸ்தானிய மாணவர்கள் கராச்சியில் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

- இந்தியாவில் இயங்கும் சி.ஐ.ஏ.யின் இன்னுமொரு முகவரான 'துக்ளக்' ஆசிரியர் சோ சமீபத்தில் சிங்கப்பூர் வந்ததும், ஜெயவர்த்தனவைப் பேட்டி கண்டதும் தெரிந்ததே. இவர் சிங்கப்பூரில் இருந்த இருநாட்களும் அரசினால் ஒழுங்குபடுத்தப்பட்ட உல்லாசக் காரில் தான் பவனி வந்தாரென்றும், பரிசுப் பொருட்களையும் பெற்றுச் சென்றுள்ளாரென்றும் இன்னுமொரு ஏடான 'கல்கண்டு' கூறியுள்ளது.

- 'பயனுள்ள தீர்வு உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டால் தவிர இலங்கைத் தமிழர்கள் முற்றாக அழிக்கப்பட்டுவிடுவார்கள்' என தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

- இலங்கைக்கு வழங்கப்படும் பொருளாதார உதவிகளை நிறுத்த வேண்டும் என இந்திய அரசின் 11 எதிர்க்கட்சிகள் வற்புறுத்தியுள்ளன.

- சோவியத் யூனியனின் கடற் பிராந்தியத்தினுள் இரு அமெரிக்க யுத்தக் கப்பல்கள் பிரயாணம் செய்தது சர்வதேச சட்டவிதிகளுக்கு முரணானது என சோவியத் யூனியன் குற்றஞ்சாட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரும்

# எமது பங்கு

-லோகன் நவரத்தினம்

"நாம் ஈழமக்கள், நமது மொழி தமிழ், நம் நாடுஈழம்" இத் தேசிய உணர்வு ஒவ்வொரு ஈழ மகனுக்கும் சொந்தமானது இதன் ஆக்கபூர்வமான செயல்பாடே ஈழத்தைப்பெற்றுத் தரும். இவ்வுணர்வினைப் புரிந்திய ஸ்ரீலங்கா அரசு எம்மை போர்க்களத்தில் குதிக்க வைக்க பல தீய சதிகளைச் செய்து வருகிறது. விலை மதிக்கமுடியாத உயிர்களையும் பலகோடி பெறுமதியான சொத்துக்களையும் நாளுக்கு நாள் இழந்து வரும் ஈழ மக்களின் சிந்தனை ஈழத்தைப் பெறும் துடிப்பில் இருக்கிறது, ஈழமென்றால் என்ன என்பதை கற்றுக்கொண்டிருக்கும் வேளையில் சிந்தனைத்தெளிவுள்ளோர்க "முதலாளித்துவத்தை ஒழிப்போம் பாட்டாளிகளை உயர்த்துவோம்" என்ற கோரிக்கைக்கு தன்னாலான உதவிகளைச் செய்து வருகிறார்கள்.

இந்நிலையிற் வர்த்தகர் கடத்தல்/ கோவிற் கொள்ளை/முதலாளி பணயக்கைதியாக ... இப்படிப் பல செய்திகளை அறிய முடிகிறது. இவற்றிற் சில இயக்கங்கள் செய்ததாக உறுதிப்படுத்தக்கூடியதாக உள்ளது. அவ்வாறானவற்றில் ஒரு விடயத்தை மட்டும் குறிப்பிடுகிறேன். கடந்த ஆறு மாதங்களுக்கு முன்ஒரு தமிழ் குட்டி முதலாளிக்குச் சொந்தமான குளங்களைத் தோண்ட வல்ல இயந்திரமொன்று கிளிநொச்சிப் பகுதியில் வைத்து இயக்கமொன்றால் கடத்தப்பட்டது. பின் இரண்டு இலட்சம் ரூபாய்கள் தரப்பட்டால் இயந்திரத்தைத் தருவதாக அறிவிக்கப்பட்டு. இதுவரை பணமும் அக்குட்டி முதலாளியால் கொடுக்கப்படவில்லை. இயக்கத்தால்இயந்திரமும் கொடுக்கப்படவில்லை.

ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரத் திட்டத்தின் கீழ் மிகவும் பின்தங்கிய கிளிநொச்சிப் பகுதிக் கிராமம் ஒன்றில் தூர்ந்து போன குளமொன்றைப் புதிப்பிப்பதற்காகவே குறிக்கப்பெற்ற குட்டி முதலாளி மொத்தப் பெறுமான வேலையாக அரசிடமிருந்து பெற்று வேலை தொடங்குவதற்காக கொழும்பிலிருந்துகொண்டு வரும் வழியில் இயக்கமொன்றால் பறித்துக் கொள்ளப்பட்டதாம்.

நாளுக்கு நாள் கூலிவேலை செய்த மக்கள் வாழும் அக் கிராமத்தில் தூர்ந்து போன குளத்தைத் திருத்தி கிராமத்தின்பஞ்ச நிலையை அகற்றுவதற்கும் கிராம வாசிகளுக்கு குறைந்தது ஒரு வருடத்திற்காவது நாட்கூலி கொடுக்கக்கூடியதாகவும் அவ்வே

லைத் திட்டம் காணப்பட்டதாம். இங்குதான் ஈழமக்களாகிய நா நாம் கவனிக்க வேண்டும். "முதலாளித்துவத்தை ஒழிப்போம். பாட்டாளிகளை உயர்த்துவோம்" என்ற கோரிக்கைகள் குறிக்கப்பெற்ற இயக்கத்தைப் பொறுத்தவரை முதலாளித்துவத்தை ஒழிக்கிறார்கள் ஆனால் பாட்டாளிகளை உயர்த்துகிறார்களா?? அவர்கள் நிலை என்ன? இயக்கங்கள் அரசை விடக் கொடியன. இயந்திரத்தைக் கடத்தாது விட்டால் எமது கிராமத்தின் வளர்ச்சி என்ன. நாம் பாட்டாளிகள் பாட்டாளி என்ற சொற்பதத்தை விட அதற்குக் கீழ் ஏதாவது பதமிருந்தால் எம்மைஅப்படி அழையுங்கள் என அக்கிராமத்து மக்கள் இயக்கங்கள் மீது வெறுப்புணர்வைப் பொழிகிறார்கள், பயிற்றப்பட்ட பல தோழர்கள் கூட செவி சாய்த்து நிற்கிறார்களா?

மேலும் அக் குட்டி முதலாளியின் நிலையை அறியும் போது அக்கிராமத்துக் கோயிற் தலைவராக இருந்த அவர் கோயிலுக்குச் சொந்தமான 4000 ரூபாயை தனது சொந்தச் செலவிற்கு எடுத்துவிட்டார். அவர் களவாடவில்லை. 6 மாதத்துக்குமுதல் நன்கு இயந்திரத்தை இயக்கமொன்றால் கடத்தல் செய்யப்பட்டபின் வெறுப்புணர்விலும் கஷ்ட நிலையிலும் பணமுள்ள போது கொடுப்போம் என்ற நிலையில் இருந்த அவரை வேறொரு இயக்கம் 2, 3 தடவை கோவிற் பணத்தைத் திரும்பக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டது. பின்பு தருவதாகக் கூறியும் முதலாளித்துவத்தை ஒழிக்கும் சிந்தனை கொண்ட அவ்வியக்கம் அவருக்குச் சொந்தமான உழவு இயந்திரமொன்றை எடுத்துச் சென்றதுடன் கடிதம் ஒன்றும் கொடுத்துள்ளனர். அதில் 10000 ரூபா தந்துவிட்டு உழவு இயந்திரத்தை மீளப்பெறும்படி கூறப்பட்டுள்ளது.

இதன் பின் மற்றுமொரு இயக்கம் அவரின் மோட்டார் சைக்கிளை எடுத்துச் செல்லும் வழியில் இராணுவத்தின் கையில் அகப்பட்டு சைக்கிளை எடுத்துச் சென்றவர் கொல்லப்பட்டதுடன் சைக்கிள் இராணுவ பாதுகாப்புக்குள்ளாகியதாம். கடந்த ஒரு மாத காலமாக அக் குட்டி முதலாளி 4 பிள்ளைகளையும் மனைவியையும் அக்கிராமத்தின் கொடிய காட்டிற்குள் விட்டுவிட்டு தலைமறைவாகி உள்ளதாக அறியப்படுகிறது.

இங்கு நாம் கவனிக்கும் போது பாட்டாளிகளை உயர்த்தும் எண்ணம் இவ்வியக்கங்களுக்கு அறவே இல்லை. என்ற உண்மை புலனாகிறது. அக்கிராமத்தின் வளர்ச்சிக்காக முன்நின்று செயலாற்றிய அக்குட்டி முதலாளியின் நிலை இராணுவத்தால் ஏற்பட்டதல்ல. ஈழமக்களாகிய எம்மால் ஏற்பட்டது. ஏனெனில் ஈழமக்கள் நாமென்றால் இயக்கங்களும் நாம். இவ்வாறான நிகழ்வுகள் ஒன்று இரண்டல்ல. சில இயக்கங்களின் செயல்கள் இராணுவத்தைவிடக் கொடிதாய் உள்ளது. எவ்வாறான முதலாளித்துவத்தை ஒழிக்க வேண்டுமென்ற கொள்கை இல்லாதவர்கள் அரசியல் ரீதியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுடைய சரியான விடுதலைக்கு கற்கும் அரசியல் உணர்வை ஈழமக்கள் முற்றிலும் கற்றிருந்தால் இன்றைய ஈழத்தின் நிலைக்கு பாட்டாளிகள் தமக்கு வேறு பட்டத்தைத் தேடிக்கொள்ளும் நிலை வராது. அரச இயந்திரமாகிய முதலாளித்துவத்தை ஒழிக்க நாம் கற்க வேண்டும். இன்றேல் அவ்வாறான கடத்தல்/கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்று இப்பகுதியில் தேசிய உணர்விற்குப் பங்கமேற்படும். எனவே நாம் விழிப்புணர்வுடனும் சரியான சிந்தையுடனும் ஈழ மக்கள் என்ற உணர்வில் செயற்படுவோம்.

# பாடைகள் பின் தொடர்கின்றன

பாசிஸ்டுகளே - உங்கள்
குழி விழுந்த கண்களும்
தொங்கிய தசைகளும்
உங்களின் சாவிற்கு - ஒலமிடுகிறது.
எச்சரிக்கை செய்கிறோம்
எங்கள் புரட்சிப்பாதையில்
அலங்கரிக்கப்படாத
உங்களுக்கான பாடைகள்
பின் தொடர்கின்றன.

நேற்றுவரை
எங்களின் பாதையில்
எங்களுடன் சேர்ந்து - காய்ந்த
சருகுகள் தான்
பூபாளம் பாடியது.

இன்றோ
எங்கள் மாதரின்
காற்சலங்கைகளும் - உங்களுக்கு
சாவுமணி அடிக்கின்றன.
மீண்டும்
எச்சரிக்கை செய்கின்றோம்
விலங்குகளிட்ட போதும்
துப்பாக்கிகள் துளைத்த போதும்
பீரங்கிகள் தகர்த்த போதும்
ஏன்?
எங்கள் பாதங்கள் - தேய்ந்து
பாதியான போதும்
பாதை மாறவில்லை
பாடைகள் பின் தொடர்கின்றன

— நா. ம. இளஞ்செழியன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்சுத் தேர்தல் முடிவுகள்: ஒரு நோக்கு

கடந்த சில மாதங்களாக பிரான்சிலும் மற்றும் சர்வதேச அரங்கிலும் பரபரப்பாகப் பேசப்பட்டு வந்த பிரான்சுப் பாராளுமன்றப் பொதுத் தேர்தல்கள் முடிவடைந்துவிட்டன. தேர்தல் முடிவுகள் முதலாளித்துவ அரசியல் கட்சிகள் 'ஜனநாயகம்' என்ற உயர்ந்த தத்துவத்தை எவ்வளவு தூரம் கேலிக்கூத்தாக்கிவிடுகின்றன என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபிப்பதாக அமைந்துள்ளன. தேர்தல் முடிவுகளின் எண்ணிக்கை விபரங்களின்படி இது வரைகாலமும் பதவியிலிருந்த சோஷலிசக் கட்சியரசு விரட்டப்பட்டு, வலதுசாரி (R.P.R – U.D.F) கூட்டணி பதவியேற்றுள்ள போதும் ஒரு அரசியல் அவதானியின் கருத்துப்படி தோற்றவர்கள் வென்றவர்களாகவும், வென்றவர்கள் தோற்றவர்களாகவும் தன்மை கொள்ளும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

உண்மையில் இந்தத் தேர்தல் முடிவுகள் ஜனாதிபதி மித்திரோனின் அபூர்வ அரசியல் அனுபவ மற்றும் தந்திரங்களின் வெளிப்பாடுதான். அது மாத்திரமல்ல தனது நோக்கங்கள் அனைத்தையும் நிறைவேற்றிக் கொண்டவகையில் ஜனாதிபதி மித்திரோன்தான் இந்தத் தேர்தலில் வெற்றியைப் பெற்றுக்கொண்ட தனியொருவராகக் கருதப்படுகிறார். ஜனாதிபதி மித்திரோனின் திட்டப்படி வலதுசாரிக் கட்சிகளின் அதிகப் பெரும்பான்மை புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட விகிதாசாரத் தேர்தல் முறை மூலம் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. இத் திட்டத்தின் மூலம் எந்தக் கட்சியும் அளவுக்கதிகமான அறுதிப் பெரும்பான்மையைப் பெறும் நிலை தவிர்க்கப்பட்டது மாத்திரமல்ல சிறிய கட்சிகளும் பாராளுமன்ற அங்கத்துவம் பெறுகின்ற வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

சர்வதேச முதலாளித்துவ செய்தி ஸ்தாபனங்களும் பல அபிப்பிராயக் கணிப்பீட்டு நிறுவனங்களும் இத் தேர்தல்களில் சோஷலிசக் கட்சி படுதோல்வியடையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் 100 தொடக்கம் 150 வரையிலான ஆசனங்களே கிடைக்கும் என்றும் அதேசமயம் வலதுசாரிக் கட்சிகளின் கூட்டணியான UDF-RPR பாரிய வெற்றியைப் பெறும் என்று கூறிய அரசியல் ஆருடங்கள் பொய்யாகின. சோசலிசக் கட்சி அரசு அமைக்கும் தகுதியை இழந்த போதும் 215 ஆசனங்களை (31.19% வாக்குகள்) பெற்று அதிக வாக்குகளைப் பெற்ற தனிக்கட்சியாகவும், சக்தி வாய்ந்த எதிர்க்கட்சியாகவும் திகழ்கிறது. அதே வேளையில் UDF-RPR கூட்டணி 274 ஆசனங்களை (42.99%)ப் பெற்றது. தேர்தலில் வெற்றி பெற்று அரசை அமைப்பதற்கு தேவையான 289 ஆசனங்களைப் பெற இக்கூட்டணி தவறிவிட்டது. இதன் காரணமாக இதர சிறு வலது சாரிக் கட்சிகள் பெற்ற 14 ஆசனங்களின் துணையுடன் RPR-UDF கூட்டணி அரசாங்கத்தை அமைக்க முன்வந்தது.




இந்தத் தேர்தல்களில் பெரும் தோல்வியைத் தழுவியது பிரெஞ்சுக் கம்யூனிஸ்டு கட்சியாகத்தான் (PC) கருதப்படுகிறது. கடந்த தேர்தலில் சோசலிசக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்ட கம்யூனிஸ்டு கட்சி கடந்த முறை 44 ஆசனங்களைப் (16.12% வாக்குகள்) பெற்றது. ஆனால் இம்முறை கம்யூனிஸ்ட் கட்சியால் (9.79% வாக்குகள்) மட்டுமே பெறமுடிந்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் இத்தோல்விக்கான காரணங்களாக சோசலிசக் கட்சிக்கெதிரான PC யின் கடுமையான கண்டனங்களும், நாட்டில் ஏற்படும் அரசியல் மாற்றங்களை சரியாக அவதானித்துச் செயற்படாத கட்சியின் பழமையான தலைமையுமே கருதப்படுகின்றன.

இத்தேர்தலில் அதிக வெற்றி பெற்றதாகக் கருதப்படும் கட்சி பச்சையாக இனவாதத்தைக் கக்கும் லெ பென்னின் தேசியமுன்னணி (FN) ஆகும். முதல் தடவையாகப் பிரெஞ்சுப் பாராளுமன்றத்துக்குள் காலெடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கும் இக்கட்சி விகிதாசார வாக்களிப்பு தந்த பலனைப் பூரணமாகப் பெற்று 35 ஆசனங்களை (9.73/ வாக்குகளை) பெற்றுள்ளது. எந்தவித அரசியல் கொள்கைத் திட்டமுமில்லாமல் நிற, இனவாதத்தையே பகைமையாகக் கக்கும் இக்கட்சிக்குக் கிடைத்த வெற்றி பிரான்சின் அரசியல் நாகரீகத்துக்கு மாத்திரமல்ல அரசியல் எதிர் காலத்துக்கும் விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையாகும்.

தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் RPR தலைவர் சிராக், ஜனாதிபதி மித்திரோனால் அழைக்கப்பட்டு பிரதமர் பதவியை ஏற்றதுடன் தமது மந்திரிசபையையும் அமைத்துள்ளார். இம்மந்திரிசபை எதிர்பார்க்கப்பட்டதுபோல இளைஞர்களைக் கொண்டதாக இல்லாமல் முதியவர்களும் சிராக்கின் நெருங்கிய நண்பர்களையும், ஆலோசகர்களையும் கொண்டதாகவே அமைந்துள்ளது. அது மாத்திரமல்ல தாம் செல்வந்தர்களின் அரசு என்பதை நிரூபிக்கும் வகையில் தனது உடனடித் திட்ட வரிசையில்... தேசியமயமாக்கப்பட்ட நிறுவனங்களை மீண்டும் தனியாரிடம் கையளித்தல், பெரும் செல்வந்தர்கள் மீதான செல்வவரியை ரத்துச் செய்தல், தொழிற்சங்க உரிமைகளைக் கட்டுப்படுத்தல், விலைக் கட்டுப்பாட்டு முறையை அகற்றல், கட்டுப்பாடற்ற சுதந்திர வர்த்தக முறையை அமுலாக்கல் ஆகியவற்றை உடனடியாகச் செயற்படுத்தப் போவதாக அறிவித்துள்ளது.

அதேவேளையில் அமைச்சரவைப் பதவிகள் தொடர்பாகவும் மற்றும் இதர உயர் பதவிகள் தொடர்பாகவும் RPR-UDF கூட்டணியினரிடையே போட்டிகளும், மோதல்களும் கிளம்ப ஆரம்பித்துவிட்டன. பிரான்சின் சரித்திரத்தில் முதற்தடவையாக ஜனாதிபதியும், பிரதமரும் எதிரெதிர்க்கட்சியில் இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அரசியல் சட்டத்தில் வரையறுத்தபடி தமது எந்த உரிமைகளையும் (குறிப்பாக வெளிநாட்டு விவகாரங்கள், பாதுகாப்பு) தாம் எந்தக் கட்டத்திலும் விட்டுக் கொடுக்கமாட்டேன் என்று ஜனாதிபதி மீண்டும் அறிவித்துள்ளார். இதனால் அடுத்துவரும் இரண்டு வருடங்களும் பிரான்சுக்கு அரசியல் ரீதியாக சிக்கலானவை. ஆனால் இக்காலப்பகுதியில் அரசாங்கத்திலிருக்கும் வலதுசாரிக்கட்சிகளின் இயலாத்தன்மையும், அவற்றின் தலைவர்களிடையே இருக்கும் ஒற்றுமையின்மையையும் புரிந்து மக்கள் அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலில் (1988) மீண்டும் சோஷலிசக் கட்சிக்கே வாக்களிப்பார்கள் என்ற ஜனாதிபதியின் நோக்கு சரியானது என்றே கருதப்படுகிறது /

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனம்

## சிறுகதை

கதிரவன் தன் செந்நிறக் கதிர்களை ஈழ மண்ணின் மேல் எய்ய மறந்து விட்டான். அவன் மறந்ததால், இவன் மார்க்சும் தனது உறக்கத்தை முறிக்க மறந்து விட்டான். அந்தத் தென்றலும் காலை வந்தனங்கள் இசைக்கும் வானம்பாடிகளும் ஆலயமணியின் ஓசைகளும் அவனைத் தாலாட்டித் துயில வைத்தன. ஈழ இயற்கை அல்லவா அது. அந்த இனிமையான மெய் மறந்த துயிலைக் கலைத்தாள் அவன் தாய். "டேய் மாக்ஸ் எழும்பு. ரியூசனுக்கு நேரமாகிறது". திடீரென்று துயில் கலைந்ததால் நடந்தது புரியாமல் சிறிது நேரம் முழியைப் புரட்டிக்கொண்டு இருந்துவிட்டு எழும்பி காலைக்கடனை முடித்துக்கொண்டு புறப்பட்டான் தன் இருபத்தியொராவது வயதே ஊன்றுகோலில் நடந்தும் அப்படிகளில் காலூன்றி உயர் கல்வி கற்றான். நடையெனும் தன் இரண்டு கால் வண்டி மூலமே எங்கும் சென்று வருவான். ஆங்காங்கே தன் தோழர்களிடம் துவிச்சக்கர வண்டியை கடன்பட்டு தூர இடங்களுக்குச் சென்று வருவான். தனது நாலாவது வயதில் தன் தகப்பனாரை இழந்த தால் குடும்ப ஏழ்மை என்ற புயற்காற்றில் சிக்கி அகதியாகி போயிருந்தான். அவனுடைய அன்னையும் தன் பொறுப்புகளை உணராமல் தனக்கென்று ஒரு துணை தேடித் தனியே சென்றும் ஏதோ கடமைக்காகக் குடும்பத்தின் நலம் விசாரிக்க வந்து போவார். அன்னையின் பொறுப்பிலிருந்து வழுகி விழுந்த குடும்பச் சுமைகளை மாக்ஸ்தோளும், அவன் தம்பி தோளும் சுமக்க வேண்டி ஏற்பட்டது. இவன் தம்பி உழைப்பு இவர்கள் குடும்பத்துக்கு எந்த மூலைக்கு தாய் சிறு வியாபாரம் செய்கின்றாள். இதன் லாபம் ஒருநேர உணவைச் சமைக்கும். திருமணம் என்னும் சந்தனப் பூஞ்சோலையினது இனிய தென்றலின் வாசனையை நுகர ஒரு சகோதரி காத்திருந்தாள். மற்றத் தங்கை கல்விப்படியில் ஏறிக்கொண்டிருந்தாள்.

மாக்ஸின் தாய் தன் பிள்ளைகள் எல்லோரையும் வளர்க்க ஒரு பெரியவரிடம் கடன் பட்டு அக்கடனுக்கு வட்டி செலுத்திவந்தாள். அந்தப் பெரியவர் இவர்களிடம் தன் மூலதனம் போட்ட வட்டியை அறவிட மிக மூர்க்கமாகவே நிற்பார். இவையாவையும் மாக்ஸ் அறிந்துள்ளான். தனிமை இவனை அணைக்கும்போது எல்லாவற்றையும் மனக்கண் முன் நிறுத்தி எண்ணிப்பார்ப்பான். மறுகணமே கவலைத் தீ அவன் உள்ளத்தை பொசுக்கி உருக்க மறக்கவில்லை. உணவிருந்தால் உண்பான். இல்லாவிடில் தன் தோழர்கள் வேண்டித்தரும் தேனீரைக் குடிப்பான். ரியூசன் வகுப்பில் பாடங்களுடன்சேர்த்து அரசியல் வகுப்புகள் நடந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அரசியல் வகுப்பில் பங்கெடுக்கத் தவறமாட்டான். விடுதலைப்போராட்டங்கள் எந்த நாட்டில் கிளைவிட்டிருக்கின்றனவோ அந்த நாட்டின் அரசியல் வரலாற்று ஏடுகளைப் புரட்டி அந்த மக்களுக்கு ஏன் விடுதலை நிழல், விடுதலை இயக்கங்களின் பிற்காலப் பொருளாதாரநோக்கங்கள் இப்படியாகப் பலவற்றினை ஆராயும் அவன் தன் நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஈழ விடுதலையையும்நோக்கினன். ஈழ விடுதலைக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணிக்க விருப்பம் ஆனல் அவனுடைய வறுமை தடை செய்தது என்றலும் ஈழ மண்ணிற்குத் தன்னல் முடிந்த சிறு நேர பங்களிப்பை வழங்கிக்கொண்டிருந்தான்.

மாக்ஸ் அன்று எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு நேரத்துடன் வீடு வந்து சேர்ந்தான். வாயிலில் கால் முத்தமிடும்போது பெரியவரின்குரலோசை அவனை வரவேற்றது." இன்றுவட்டி தராவிட்டால் எனி எப்ப தருகிற நோக்கம்". கணீர் என ஒலித்த அந்தக் குரலோசைக்கு அவன் தாய் செவிசாய்த்தாள். "சின்னவனின் உழைப்புக் காசு நாளைக்கு வரும் தாறன்" -"இப்படித்தான் போன மாதமும் நாலு நாள் சென்று வட்டி தர ஏற்றுக்கொண்டேன். எனி வட்டி தர நாள் சென்றல் வட்டிக்கு வட்டி அறவிடுவன், கவனம்" சாதாரண கோபம் கலந்த சொற்களை நெல்லை விதைப்பது பொல் விதைத்துவிட்டுச்சென்றர். மாக்ஸின் செவியில் யாவும் எதிர்மோதியதால் உணவை அரைகுறையாகவே உண்டான். ஒரு நாளாவது படித்தது போதும் வேலை ஏதாவது தேடென்று தாய் சொல்லாள். மாறாக மாக்ஸ் குடும்ப நிலையை உணர்ந்து செயற்படட்டும் என்று விட்டிருந்தாள். தன் வீட்டைச்சுற்றி காவல் நாய் போன்று உலாவி வந்தான். அவன் உள்ளத்தைச் சிந்தனை அம்புகள் பதம்பார்த்துக்கொண்டிருந்தன. எதிரே சகோதரி அவன் உள்ளத்தின்பாதுகாப்புக் கவசம் போன்றிருந்தாள் ன்றினதால் ஏவப்படும் சிந்தனைகள் தடைப்பட்டன. "என்னடா மாக்ஸ் தொடரும் எமதுவறுமை நிலையைப் பார்த்தியா, இன்னும் எத்தனை காலத்திற்கு இப்படியே படிப்பு படிப்பு என்று உயிர் விடப் போகின்றய். அதுவும் இந்த இனவெறி பிடித்த ஆட்சியில் தமிழர்களாகிய எமக்கு எங்கே இடம் அடுத்த கிழமை வட்டி கட்ட வேண்டும். மீதியாக காதிலிருக்கும் இந்தத் தோட்டின் மூலமாகத்தான் வட்டி தீரப்போகின்றது. அடுத்த வட்டியை எந்த சொத்தின் மூலமாகத் தீர்ப்பது. இப்படியே எமது சொத்துக்கள் அழியட்டும்". -"என்னை என்ன செய்யச் சொல்கின்றய்"- அர்த்தமில்லாத எரிமலைக்குழம்புகளைக் கக்கினன் "இந்த ஊரில் எங்கேயாவது வேலை தேடிச்செய்தாலும் பிணம் தின்னும் கழுகுகள் விடாது. எம்மைப் பிடித்துசமைத்து விடுவானுகள்". -"டேய் தம்பி பெரியவர் உதவி செய்கிறராம் வெளிநாடு போடா". -"என்ன வெளி நாடா?" ஒரு ஏக்கக்குறியோடு அவன் கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் தடைப்பட, உணர்ச்சி அலைகள் ஒன்றோடொன்று மோதி மே
லோங்கச் செய்தன, அவன் வசன நடையை. "எமது வாழ்க்கையில்
மீண்டும் பெறமுடியாத உயிர்களையும், இளமைகளையும், இரத்தங்
களையும் கொடுத்தும், சிந்தியும் காத்து வரும் இவ் ஈழ மண்ணை
அந்நிய ஓநாய்கள் பதம்பார்க்கத் துடிக்கும் இவ் வேளையில் வெ
ளிநாட்டவனுக்கு எமது உடலுழைப்பை வழங்கி அவர்கள் நாட்டைக்
காக்கச் செல்கிறாயே. "போடா, நீ அறப்படித்தவன் உனக்கு இ
தற்கு மேல் நான் ஒன்றும் சொல்ல மாட்டேன்". அவன் கால்கள்
நடைச்சக்கரத்தைச் சுழல விட்டன. மாக்சின் உள்ளத்தில் மீண்டும்
அந்தத் தாக்குதலினால் சிந்தனைக் கதிர்கள் பளிச்சிட்டன. என்
குடும்ப ஏழ்மையை ஒழித்துவிட்டால், நிம்மதியாக எமது விடுதலை
க்கு முழுமையாக என்னை ஒப்படைக்கலாம். என் கடமைகளை மு
டித்துவிட்டு வருமட்டும், இந்த ஈழ மண் தன்னை மீட்க இவன் வரு
வான் என்று எதிர்பார்த்துக் காத்திருக்குமா? விடையை எதிர்பா
ராமலே தாயிடம் போய் வெளிநாடு போகப்போகிறேன் பணத்
தைப் பெரியவரிடம் ஒழுங்கு செய்யுங்கள் இதோ வெளியில் போய்
விட்டு வருகிறேன். கால்கள் முன்னோக்கி அசைய, டேய் மாக்ஸ்
வெளியில் போகாதை ஆமி சுட்டுக்கொண்டு திரியிறான், எதிர்பா
ராமல் எழுந்த தாயின் குரல் அவனைத் தடுத்து நிறுத்த கால்கள்
பின்நோக்கி அசைந்தன. பின் மதில் நோக்கி ஓடிய வேகத்தில்
ஒரு தாண்டல். விரைந்தான் களம் நோக்கி அந்தச் சுதந்திரத்
தியாகி. களத்தை அடைந்த அவன் தோழர்களை நோக்கினான்.
" மாக்ஸ் இனவெறி பிடித்த அரச இயந்திரங்கள் இக்கிராமத்தில் உ
லாவும் தேன் மதுரத் தமிழை சுவை பருகிப் பார்க்க வருகிறார்க
ள். உடைகளை மாற்று". சுறுசுறுப்பாக புன்னகை தவழ்ந்த முக
ங்களுடன் தோழர்கள் யாவரும் உடை மாற்றி ஆயுதம் தரித்தனர்
சில குழுக்கள் குழுக்களாக தோழர்கள் கூடி கிராம நுழை வாயி
லை நோக்கியும் வேறு சில குழுக்கள் வெவ்வேறு இடங்கள் நோக்
கியும் நகர்ந்தனர். இதோ தமிழினத்தின் உயிரையும், குருதியை
யும் சுவைத்துப் ருசி காணவந்த வெறிகொண்ட கூலி ஓநாய்கள் மீது
சடசடக்கிறது நவீன ரக ஆயுதங்கள். அங்கே தீர்ந்தன பல சன்
னங்கள். உருண்டு திரண்டு இருந்த தோள்முட்டுக்களின் மேல் பந்து
போல் துள்ளி விளையாடி வேட்டுச்சன்னங்களை முன்னோக்கித்தீர்த்து
க்கொண்டு இருந்தது அத்தனை தோழர்களின் ஆயுதங்களும். ஒவ்
வொரு துப்பாக்கிக் குழாய்கள் ஊடாக பாயும் குண்டுகள் அனைத்
தும் தமிழ் இனத்தின் ஒவ்வொரு துளி இரத்தத்தையும் சுட்டிக்காட்
டுவது போன்று சிகப்பு நெருப்புக்களைக் கக்கிக்கொண்டு பிணம்
தின்னும் ஓநாய்களின் உடல்களைச் சுவை பார்த்தன. மிக மூர்க்க
மாகப் போராடிக்கொண்டிருக்கும் தன் தோழர்களுக்குக் கட்டுக்
கட்டாக இருந்த அந்தத் தோட்டாக்கள் நிரம்பிய நீளப் போர்
வைப் பையை நிலத்தில் சுழன்றுசுழன்றுகொண்டு விநியோகித்துக்
கொண்டிருந்தான். இடைக்கிடை கைக்குண்டுகளை எறிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரியைத் திணறடிக்கச் செய்தான் தான் பெற்ற அந்த குறைந்த பட்சப் பயிற்சிகள் அனைத்தையும் அக் களத்தில் இயக்கினன் அவ்வி ளங்காளை. சுதந்திர உணர்வும் தியாகமும் துணிவும் கொண்ட இளம் போராளிகளின் வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாத இனவெறி இயந்திரம் பின்வாங்கித் தனது குகையை நோக்கி ஓடியது. காயம் அடைந்த சில போராளிகள் முதலுதவிச் சிகிச்சைக்கு அனுப்பப்பட்டார்கள். இரத்தம் சிந்தாமல் சுதந்திரமா? ஈழ மண்ணையும் அதில் வாழும் மக்களையும் காக்கப் புறப்பட்ட இந்தப் போராளிகளின் மரத்த உடல்களுக்கு துப்பாக்கிக் குண்டுகள் தான் என்ன முடியும், மரத்துப்போன தமிழ் சன்னங்களை ஏந்துவதும் உயிர் துறப்பதும் சிகிச்சைபெறுவதும் நடைபெற்றுக்கொண்டிருப்பவை தானே. தன் ஈழ மண்ணைக் காக்க இந்த அளவிலாவது உடலுதவிகள் வழங்கிய திருப் தியில் வீட்டை அடைந்தான் மாக்ஸ். வெளிநாட்டு பிரயாணம் தாய், சகோதரி தலைமையில் தடல் புடலாக நடைபெற்றுக்கொண்டிருந்தன. புறப்படுவதற்கு முன் வீரமும் உறுதியும் கொண்ட இளம் போராளிகள் தரிசித்து சிறு உரையும் நல்கினன்.

தோழர்களே ஈழம் அழைக்க வேண்டிய வேளையிலே என்னை எனது குடும்ப வறுமை தன்னை மீட்கும்படி அழைக்கின்றது. என் வறுமை, தான் என்னை விட்டாலும், வட்டி என்னும் கொடிய மிருகம் தன்னை மீட்கும்படி வற்புறுத்துகிறது. என்றோ ஒரு நாள் தமிழீழம் மலரும். அதில் வறுமை என்ற மூன்றெழுத்து அழிக்கப்படும் ஆனால் தமிழீழம் அமைக்கும் நாமே வறுமையை ஒழிக்கப் புறப்பட்டால் ஈழத்தை மீட்பவர்கள் யார்? ஈழம் விடுதலை அடைவது எப்போ? எனக்கேற்பட்ட இக்கதி ஈழத்தை அமைக்க முன் வரும் தோழர்களுக்கு ஏற்படக்கூடாது. அவர்கள் தங்கள் விடுதலைப் பாதையிலிருந்து விலகும் நோக்கம் எழல் ஆகாது. ஈழத்தை விட்டு வெளியேறுபவர்கள் பிறந்த மண்ணை மறந்து விடுவார்கள்என எண்ணி விடவேண்டாம். நான் உழைக்கும் மூலதன உழைப்பின் அரைப்பகுதியை ஈழ மலர்வுக்கு வழங்குவேன். அது நிட்சயமாக எமது மக்களின் வறுமையை நீக்கவும் பயன்படும். இந்த ஈழ மீட்புக்கு இளம் காளையர்கள் மட்டுமல்ல, மூலதனமும் தேவை. ஒரு போராளியையை உருவாக்க ஏற்படும் முதலதனச் செலவை ஈழ மக்கள் உணர்வார்கள். இந்த உணர்ந்த மக்கள் மேலும் மூலதன பங்களிப்பை வழங்குவார்களா? ... இந்த தனி ஒருவன் இடப்போகும் மூலதனப் பங்கு ஈழவிடுதலைக்குக் காணுமா என்பதையும் உணர்வார்களா?

- தமிழ்ச் செல்வன் மைக்கல் பாலு.

தோழர்களே!

ஈழ முன்னணி செய்தித் தொடர்பு நிலையம் (EPIC) ஊடாக ஈழச் செய்திகளை தொலைபேசி மூலம் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய தொடர்பு எண் : 48-74-60-43.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலிந்த கரங்கள்


ஈரம் உலருமுன்னே
இரத்தச் சிதறல்கள்
மீண்டும் மீண்டும்........
மனிதவேட்டைகள்
மண்ணில் புதைக்கப்பட்ட
மனித நாகரீகங்கள்
மயான வடுக்களுக்கு
சொந்தங் கொண்டாடுகின்றன.

ஒவ்வொரு இரவும்
ஒவ்வொரு பகலும்
ஒவ்வொரு யுகங்களாக
விடியலின் வரவுக்காய்
விழியோரக் கனவு தாங்கி
வீதியோரம் கதை முடிந்து
இன்னும் இன்னும்
இதுவே தொடர்கதையாய்.....
ஓ.... தார்மீகத்தின்
தாற்பரியம்
அகராதியில் திரிக்கப்பட்டுவிட்டதோ?...

சுடச் சுட வெளுப்பதும்
வெட்ட வெட்டத் தழைப்பதும்
நிஜம் என்றால்...
எங்கள் மக்களின் வலிந்த கரங்களும்
மேலும் மேலும்.....
உறுதி பெற்று
ஒன்றாகி உயரும்

அருந்ததி —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெளியீடு: ஈழ விடுதலைப் பேரவை. (பிரான்சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org